www.eelamview.com

விடுதலைப்புலிகள்

குரல்: 22 | சித்திரை - வைகாசி 1991 | அன்பளிப்பு: ரூபா 7

# போர்நிறுத்தமும் பேச்சுக்களும்

# சிறீலங்கா அரசின்

# தப்புத் தாளங்கள்

போர்நிறுத்தமும் பேச்சுக்களும் பற்றி கொழும்பிலிருந்து பல்வேறு சமிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. சமாதானப் பேச்சுக்களுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் நெகிழ்த்தப்படுகின்றன. பழைய நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுப் புதிய நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. புலிகள் இயக்கத்தை வேரோடு அழிப்போம் என போர்முரசு கொட்டியவர்கள் புலிகளுடன் பேசத்தயார் என வெள்ளைக்கொடி உயர்த்துகிறார்கள். "யுத்தத்தில் எனக்கு நம்பிக்கையில்லை, யுத்தத்தால் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது" எனப் பிரேமதாசா ஞானோபதேசம் செய்து வருகிறார். ஒட்டுமொத்தத்தில் கொழும்பிலிருந்து வெளியாகும் சமாதான சமிக்கைகளின் அர்த்தமென்ன? இராணுவ அணுகுமுறையைக் கைவிட்டுச் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகாணச் சிங்கள ஆளும் வர்க்கம் விருப்பம் கொண்டுள்ளதா? இன்று தமிழீழ மக்கள் மத்தியில் மேலோங்கி நிற்கும் கேள்விக்குறிகள் இவை.

## புலிகளின் போர்நிறுத்தமும் சிறீலங்காவும்

போர் நிறுத்தமும் பேச்சுக்களும் பற்றி விடுதலைப் புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டை ஏற்கனவே தெட்டத்தெளிவாக விளக்கியுள்ளது. இந்தப் புத்தாண்டிலிருந்து ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்தது மட்டுமன்றி நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கும் தயார் என விடுதலைப்புலிகள் பகிரங்கமாக அறிவித்தனர். ஆனால் சிறீலங்கா அரசு போர் நிறுத்தத்தை நிராகரித்ததுடன் பேச்சுவார்த்தைகளுக்கும் கண்டிப்பான, ஏற்றுக்கொள்ளமுடியாத நிபந்தனைகளை விதித்தது. விடுதலைப்புலிகளின் சமாதான சமிக்கையை சிங்கள ஆட்சிப் பீடம் தவறாக மதிப்பீடுசெய்தது. உலக நாடுகளின் நல்லெண்ண முயற்சிகளுக்கு இசைவாகப்புலிகள் அறிவித்த போர் நிறுத்தத்தை இராணுவப் பலவீனத்தின் வெளிப்பாடாகச் சிங்கள அரசு கருதியது. எனவே, யுத்தத்தைத் தீவிரப்படுத்தி புலிகளை அழித்துவிட அரசு கங்கணம் கட்டியது. ஆறு மாதங்களுக்குள் புலிகளை அழித்து விடுவேன் என ரஞ்சன் விஜயரட்ணா சபதம் எடுத்தார்.

கடந்த நான்கு மாதங்களாகத் தீவிரமடைந்த யுத்தமும் அதில் சிங்கள இராணுவம் சந்தித்த பேரிழப்புகளும், இராணுவவாதியான ரஞ்சனின் மறைவும், சிங்கள அரசுக்கு ஒரு எதார்த்த உண்மையை உணர்த்தியது. அதாவது விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு மாபெரும் போராட்ட சக்தி. அதனை இராணுவ ரீதியில் வெற்றி கொள்வது முடியாத காரியம், என்ற உண்மையை உணர்த்தியது. இந்தப் புரிந்துணர்வின் தாக்கம் ஒருபுறமும், சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இன்னுமொரு புறமுமாக சிங்கள அரசுக்குப் புதிய நிர்ப்பந்தங்களை எழுப்பியது. இந்த நிர்ப்பந்தங்களின் அடிப்படையிலிருந்துதான் கொழும்பிலிருந்து சமாதான சமிக்கைகள் வெளிவரத்தொடங்கியுள்ளன. எனினும் இந்த சமாதான முயற்சிகள் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்ற அடிப்படையான மனமாற்றத்துடன் எழவில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு நிர்ப்பந்தங்களைத் தற்காலிகமாகச் சமாளிக்கும் நோக்குடனேயே பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை மீண்டும் அரங்கேற்ற அரசு முனைகிறது.

## சிங்கள அரசின் உள்நோக்கமும் பேச்சுவார்த்தையும்

தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி, ஒற்றையாட்சியின் கீழ் ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என பிரேமதாசா மீண்டும்மீண்டும் பழைய பல்லவியைப் பாடிக்கொண்டிருப்பது ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. அதாவது தமிழரின் அடிப்படையான தேசியப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கோ அன்றி அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி அமைப்பதற்கோ பிரேமதாசா அரசு தயாராக இல்லை என்பதனையே இந்நிலைப்பாடு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

கொழும்பில் முகாமிட்டிருந்து சிங்களப்பேரினவாதத்தின் ஏவுநாய்களாகவும், தமிழினத்துரோகிகளாகவும் செயற்பட்டுவரும் சகல தமிழ்க் குழுக்களும் தமிழரின் பிரதிநிதிகளாக பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டுமென பிரேமதாசா அரசு தொடர்ந்தும் முன் நிபந்தனை விதித்து வருகிறது. இந்த நிபந்தனையைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என நன்கு தெரிந்தும் பிரேமதாசா இதனை வலியுறுத்துவதன் காரணம் என்ன? விடுதலைப் புலிகளை தமிழரின் ஏகோபித்த பிரதிநிதிகளாக ஏற்காமல், புலிகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து ஏனைய குழுக்களுடன் புலிகளைச் சமநிலைப் படுத்தி, ஒரு சாம்பார் சர்வகட்சி மாநாடு கூட்டி, துரோகக் கும்பல்களின் ஒத்துழைப்போடு அற்ப சொற்ப சலுகைகளை வழங்கி ஒற்றையாட்சியின் கீழ் ஒருதீர்வைத் திணித்துவிடலாமென பிரேமதாசா கனவு காண்கின்றார். இந்த நோக்கத்துடன்தான் எட்டப்பர் கும்பல்களுக்கு கொழும்பில் ஏகப்பட்ட கௌரவங்கள் வழங்கப்படுகின்றன.

சமரசப் பேச்சுக்கான சமிக்கைகளை விடுத்துவந்த போதும் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு பிரேமதாசா அரசு இன்னும் இணங்கவில்லை. அத்தோடு, போர் நிறுத்தம்பற்றி எதுவும் குறிப்பிடாது போர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்திவருகிறது. ஆனி மாதம்வரை சிங்கள இராணுவத்திற்குக் கால அவகாசம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. அதாவது, தமிழ் மக்களை மேலும் ஆக்கிரமித்து, இராணுவ மேலாதிக்க நிலையிலிருந்து பேச்சுக்களை நடாத்துவதையே சிங்கள ஆளும்வர்க்கம் விரும்புகிறது. இந்த இராணுவ மேலாதிக்கத்தை பெற்றுக் கொள்வது இலகுவான காரியமல்ல என்பதை புலிப்படை வீரர்கள் தீர்க்கமான முறையில் உணர்த்திவந்தபோதும் இராணுவம் பகீரத முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. பலத்தின் அடிப்படையில் பேரம்பேசி தமிழரின் உரிமைகளை மறுக்கலாமென சிங்களப் பேரினவாதம் தப்புக்கணக்கு போடுகிறது.

## பொருளாதாரத் தடை சிறீலங்காவின் தப்புக்கணிப்பு

தமிழீழ மக்கள், கடந்த 10 மாதங்களுக்கு மேலாக, ஒரு பாரிய பொருளாதாரப் பளுவை சுமந்துவருகிறார்கள். தமிழர்மீது திணிக்கப்பட்டிருக்கும் இந்தப் பொருளாதார அழுத்தத்தை எவ்வகையிலும் தளர்த்தவோ, நீக்கவோ அரசு விரும்பவில்லை. இந்தப் பொருளாதாரச் சுமையோடு பேச்சுக்களை நடாத்திப் பேரம் பேசுவதற்கு அரசு விரும்புகிறது. தென்

(13 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# புலிகளின் குரல்

## தேசாபிமானமும் அந்நிய மோகமும்

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் இன்று ஒரு முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனையை எட்டி நிற்கிறது. முழு அளவிலான ஒரு விடுதலை இராணுவத்தை உருவாக்கி, தமிழீழத்தின் பெரும் பகுதி நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து, தனியரசு அமைக்கும் இலட்சியம் நடைமுறைச் சாத்தியமானது என்பதை விடுதலைப் புலிகள் இயக்கம் நிரூபித்துவருகிறது. என்றுமில்லாத பேரிழப்புகளைச் சந்தித்து எதிரி ஆட்டம்கண்டு நிற்கிறான். இராணுவ அணுகுமுறையால் தமிழரின் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியாது, புலிகள் இயக்கத்தை வெற்றிகொள்ளவும் முடியாது, என்ற எதார்த்த அரசியல் உண்மையைச் சிங்கள ஆளும் வர்க்கம் உணரத்தொடங்கியுள்ளது. தொடர்ந்து, விடாப்பிடியாக, உறுதியுடன் போராடினால் எமது விடுதலைப் பயணம் வெற்றியில் முடியும் என்பதை தமிழீழ மக்களும் உணரத்தொடங்கியுள்ளனர். நீண்ட, கடினமான, இரத்தம்படிந்த போராட்ட வரலாற்றின் இறுதிக்கட்டத்தை நாம் அடைந்துவருகிறோம். எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயிக்கப்போகும் இந்த முக்கியமான காலகட்டத்தில் போராட்டத்தின் எழுச்சி வடிவமாக மக்கள் சக்தி அணிதிரண்டு உறுதிபூண்டு நிற்பது அத்தியாவசியமானது. ஆனால் இந்த முக்கியமான வரலாற்றுச் சூழ்நிலையிற் போராட்டத்தின் இறுதிக்கட்டத்தில், குறிப்பிட்ட ஒரு தொகையில் தமிழீழ மக்கள் அந்நிய நாடுகளுக்கு வெளியேறுவது எமக்கு ஆழ்ந்த கவலையையும் ஏமாற்றத்தையும், கொடுக்கின்றன.

விடுதலைப் போராட்டங்கள், யுத்த நெருக்கடிகள், உள்நாட்டுப் போர்கள் காரணமாக பொதுமக்கள் இடம்பெயர்வதும், அகதிகளாக அவலப்படுவதும், இன்றைய உலகில் தவிர்க்கமுடியாத நிகழ்வுகளாக மனிதகுலத்தைபாதித்து வருகின்றன.

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றிலும், காலத்திற்குக் காலம், பெரிய அளவில் பொதுசன இடம்பெயர்வுகள் நிகழத்தான் செய்திருக்கிறது. அலையலையாகக் குமுறிய இனக் கலவரங்கள், இராணுவப் பயங்கரவாத வெறியாட்டங்கள் காரணமாகப் பெருந்தொகையான தமிழ் மக்கள் அகதிகளாயினர். சொந்தக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர். தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனர். இந்தப் பொதுசன இடம்பெயர்வு சமீப காலத்தில் என்றுமில்லாதவாறு தீவிரமடைந்தது. இராணுவ நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு எதிராக ஏவப்பட்டதால் அகதிப் பிரச்சனை உக்கிரமடைந்தது, எதிரி இராணுவத்தால் சூழப்பட்ட நிலையில் உயிராபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளக் கணிசமான தொகையில் தமிழீழ மக்கள் அகதிகளாக இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர், தென் தமிழீழத்திலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் வடக்கே அகதிகளாக இடம்பெயர்ந்தனர். தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் ஏற்பட்ட இடம்பெயர்வுகள் இவை. இந்த மக்களின் அவலநிலையை நாம் நன்குணர்வோம். ஆனால் போராட்டத்திற்கு முகம்கொடுக்க விரும்பாமல், போராட்டத்தால் எழும் கஷ்டங்களையும், துன்பங்களையும் எதிர்கொள்ளத் திராணியற்றுத் தனிப்பட்ட சுகபோகங்களைக் கருத்திற்கொண்டு பிறந்த மண்ணையும் வளர்ந்த சமூகத்தையும் கைவிட்டு அந்நிய நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயரும் மக்கள் கூட்டத்தை எப்படி வர்ணிப்பது? போராட்டத்திற் பங்குகொண்டு உரிமைகளை வென்றெடுத்துச் சுதந்திரமாக கௌரவமாக வாழவிரும்பாமல் அந்நிய நாடுகளில் அகதிமுகாம்களில் அந்நியரிடம் பிச்சைப் பணம் வாங்கி அவமானப்பட்டு வாழ்வதில் பேரின்பம் காணும் இந்த வெளிநாட்டுப் பிரியர்களின் அர்த்தமற்ற வாழ்க்கையை எப்படி வர்ணிப்பது?

ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பியபடி தனது வாழ்க்கையை நிர்ணயித்துக்கொள்ளும் தனிமனித சுதந்திரத்தை நாம் கௌரவிக்கிறோம். ஆயினும், ஒவ்வொரு மனிதனுக்கும் தனது சமூகத்தின்பால், தனது இனத்தின்பால், தனது தேசத்தின்பால், சில தார்மீகக் கடப்பாடுகள் உண்டு. தனது சமூகத்தின், இனத்தின், தேசத்தின் விடிவுக்காக, விமோசனத்திற்காக, மேம்பாட்டிற்காக உழைக்கும் அந்நெறிக் கடப்பாட்டை உதாசீனஞ்செய்து தனக்காக மட்டும் வாழ்வை வரித்துக்கொள்பவன் இனப்பற்றற்ற சுயநலவாதி. இந்தச் சுயநல வாழ்வில் எவ்வித அர்த்தமும் இல்லை. தனிமனித சுதந்திரம் அப்பட்டமான சுயநலமாக மாறும்பொழுது அந்தச் சுதந்திரத்திலும் அர்த்தமில்லை.

இன்று எமது தாய்மண்ணை ஆக்கிரமிக்க எதிரியானவன் பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகிறான். அங்குலம், அங்குலமாக எமது தாய்மண்ணை மீட்டெடுக்க எமது போராளிகள் இரத்தம் சிந்திவருகிறார்கள். செத்து மடிந்து வருகிறார்கள். இந்தத் தாயக மீட்புப் போராட்டத்தில் இதுவரை கிட்டத்தட்ட மூவாயிரம் போராளிகள் உயிர்த்தியாகம் செய்திருக்கிறார்கள். உயிரிலும் மேலாகத் தாய்மண்ணை நேசித்து, பிறந்த மண்ணை மீட்டெடுக்க ஆயிரமாயிரம் போராளிகள் களத்தில் இரத்தம் சிந்திவரும் இவ்வேளையில், தாய்மண்ணைவிட்டு தப்பியோடி அந்நியமண்ணில் அடைக்கலம் புகுவது மிகவும் கோழைத்தனமான செயல் என்றுதான் சொல்லவேண்டும்

எத்தனையோ துன்பங்களையும், துயரங்களையும் சந்தித்து, எத்தனையோ நெருக்கடிகளையுஞ் சமாளித்து, என்னதான் நிகழ்ந்தாலும் தாய்மண்ணிலேயே வேரூன்றி நிற்கவேண்டுமென்ற உறுதியோடு வாழும் எமது மக்களை நாம் பாராட்டுகிறோம். இடம்பெயர்ந்தும், அகதிகளாக அல்லற்பட்டும், பசியோடு வாழ்ந்தும், சாவைச் சதா சந்தித்தும், சொந்த மண்ணைவிட்டு வெளியேறுவதில்லை எனத் திடசங்கற்பம் பூண்டு நிற்கும் இந்த மக்கள்தான் உண்மையான மண்ணின் மைந்தர்கள்.

தமிழீழத்திலிருந்து பெருமளவிலான மக்கள் வெளிநாடு செல்வதையும் கொழும்புக்கு இடம்பெயர்வதையும் சிங்கள அரசு ஊக்குவித்து வருகிறது. தென்தமிழீழத்தைச் சிங்களமயமாக்கி, வட தமிழீழத்தின் சனத்தொகையைக் குறைத்து, விடுதலைப்போராட்டத்தைப் பலவீனப்படுத்த சிங்களப்பேரினவாதிகள் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறார்கள். இந்த நாசகார நோக்கில் கிழக்கிலிருந்து தமிழர்களை விரட்டியடித்து தமிழ்க்கிராமங்களிற் சிங்களக் குடியேற்றங்களைத் தீவிரப்படுத்திவருவதோடு, வடக்கிலிருந்து தமிழர்கள் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் தஞ்சம் புகுவதைச் சிங்கள அரசு மறைமுகமாக ஊக்குவித்து வருகிறது. வடக்கில் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரபடுத்துவதும் இந்த நோக்கத்தில்தான் யாழ். குடாநாட்டு மக்கள் அனைவரையும் வவுனியா அகதிமுகாம்களுக்கு இடம்பெயரச் செய்யவேண்டுமென முன்பு ஒருமுறை காலஞ்சென்ற ரஞ்சன் விஜயரட்ணா பகிரங்கமாக அறிவித்தார். இதிலிருந்து அரசின் வஞ்சக நோக்கத்தை நாம் புரிந்துகொள்ளலாம்.

எமது மக்களின் மனவுறுதியை உடைத்து, விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கச்செய்ய எதிரியானவன் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு வருகிறான். விடுதலைப்போர் கூர்மையடைந்துவரும் இந்தச் சூழ்நிலையில் எதிரியின் நாசகார நோக்கங்கள் குறித்து நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

நீண்டகாலமாக, உயிரிழப்பாகவும் உடமை அழிவாகவும் நாம் சந்தித்த பேரிழப்புகளும் எமது போராளிகளின் உன்னதமான தியாகங்களும், எமது மக்கள் வடித்த இரத்தக் கண்ணீரும் ஒருபொழுதும் வீண்போகாது. ஒரு வீரஞ்செறிந்த விடுதலை வரலாற்றின் அற்புதமான அர்ப்பணிப்புகளாக அவை மகிமைபெறும். ஒரு நாள் எமது இலட்சியம் நிறைவேறும். அப்பொழுது எமது மண்ணுக்காக உயிர்நீத்த மாவீரர்கள் ஒரு சுதந்திரத் தாயகத்தின் சிற்பிகளாக வரலாற்றில் இடம்பெறுவர். எமது மண்ணை நேசித்த மக்கள், எமது மண்ணில் வேரூன்றி நின்ற மக்கள், ஒரு சுதந்திர தேசத்தின் உரிமையாளராக, ஆட்சியாளர்களாக உயர்ச்சிபெறுவர்.

## மாணவப் போராளிக்கு வீரவணக்கங்கள்

*28 - 3 - 1991 அன்று கீரிமலையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூடுபட்டு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க அங்கத்தவரான ஜெகன் வீரமரணமடைந்துள்ளார்.*

*விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கத்தின் பல்வேறு வேலைத்திட்டங்களிலும் பங்குகொண்ட ஜெகன் ஒருதமிழீழ மாணவனுக்கே உரித்தான தேசக்கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.*

*28 - 3 - 1991 அன்று கீரிமலையை நோக்கி இராணுவத்தினர் முன்னேற எடுத்த நடவடிக்கையை முறியடிக்க நடந்த சண்டையில் காயமடைந்த புலி வீரர்களை மீட்டெடுத்து - முதலுதவிச் சிகிச்சை அளிக்கும் பணியில் மாணவர் இயக்க அங்கத்தவர்கள் சிலருடன் ஜெகனும் ஈடுபட்டிருந்தான்.*

*ஒரு புலி வீரனுக்கே உரித்தான துணிச்சலுடனும், எது நடந்தாலும் நடக்கட்டும் என்ற மனோதிடத்துடனும் களம்புகுந்து காயமடைந்த போராளிகளுக்கு முதலுதவிச் சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கும் போது எதிரியின் துப்பாக்கிக் குண்டுபட்டு ஜெகனும் களத்தில் மடிந்தான்.*

*தமிழீழ மாணவ சமூகத்துக்கு ஒரு முன்னோடியாக இருந்து வீரமரணமடைந்த இந்த மாணவப் போராளிக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*



வேலாயுதம் ஜெயகாந்தன்
(ஜெகன்)

| பிறப்பு | வீரமரணம் |
| --- | --- |
| 23-8-1971 | 28-3-1991 |

www.eelamview.com

- தமிழீழத்தின் ஒரு பகுதியைத் துண்டாடும் நோக்குடன் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வலயம்.
- ஒரு நீண்ட போருக்குத் தயார்ப்படுத்தப்பட்ட நிலையிலிருந்த சிங்கள முப்படைத் துருப்புக்கள்.
- 6 சியாமாசெற்றி விமானங்கள், 4 உலங்குவானூர்திகள், 4 ராட்சத குண்டு வீச்சு விமானங்கள். 2 பாரிய கப்பல்கள், 10பீரங்கிப் படகுகள், கடலிலிருந்தும் வானிலிருந்தும் பொழிந்து கொண்டிருந்த குண்டு மழை.
- இத்தனைக்கும் மத்தியில் சிலாவத்துறை பகுதியில் நாம் நடாத்திய நான்கு நாள் போர்.

# சிலாவத்துறை ஒரு வரலாற்றுப் போர்

1984ம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி வெள்ளாங்குளம் என்னுமிடத்தில் ஒரு கண்ணி வெடித்தாக்குதல் நடாத்தப் பட்டது. அந்த இடியோசையுடன், மன்னார் மாவட்டத்தில் எமது இராணுவ நடவடிக்கைகள் தொடக்கி வைக்கப் பட்டன.

இந்தக் காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் 9 சிங்களப்படை முகாம்கள் (காவல் துறை, இராணுவம், கடற்படை) இருந்தன.

காலம் செல்லச் செல்ல எமது இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்க அதிகரிக்க இராணுவ முகாம்களின் தொகையும் குறையத் தொடங்கியது. இறுதியில், மன்னார் மாவட்டத்தில் 4 படை முகாம்களே எஞ்சியிருந்தன. அதில் ஒன்றுதான் சிலாவத்துறை முகாம் ஆகும்.

மன்னார் - மடு பிரதான வீதியிலுள்ள முருங்கனிலிருந்து சுமார் 10 கி. மீ. தொலைவில் இருக்கும் ஒரு கரையோரப் பகுதி தான் சிலாவத்துறை.

சிலாவத்துறை இராணுவ முகாமுக்குப் பக்கபலமாக அதன் அருகாமையிலிருக்கும் உதவி அரசாங்க அதிபர் விடுதியிலும், பாடசாலைக் கட்டடத்திலும் இரண்டு மினி முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இத்துடன் சிலாவத்துறை முகாமிலிருந்து 4 கி. மீ. தொலைவிலுள்ள கொக்குப்படையானில் ஒரு இராணுவ முகாமும் 6 கி. மீ. தொலைவிலுள்ள கொண்டைச்சி மர முந்திரிகைப்பண்ணையில் ஒரு முகாமும் இருந்தன.

இவ்விதமாக, சிலாவத்துறைப்பகுதி ஒரு இராணுவ வலயமாக மாற்றப்பட்டுக் கிடந்தது. இப்பகுதி இராணுவ மயப்படுத்தப்பட்டதற்கு பலமான ஒரு காரணம் இருக்கிறது.

கொண்டைச்சியில் 6000 ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்படும் ஒரு பெருந்தோட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. இப் பண்ணையில் சிங்களவர்களே குடியேற்றப் பட்டிருந்தார்கள். இது ஒரு புறமிருக்க மன்னார் மாவட்டத்தின் தென்முனையோரமாகப் புத்தளம் மாவட்டத்துடன் சேர்ந்திருந்த தமிழ்க் கிராமங்களான வண்ணாத்திவில்லு, பெரிய நாகவில்லு, இலவன்குளம், முடக்கண்டா வெளி, பொம்பரிப்பு, கருவாளகுடா, போன்ற கரையோரக் கிராமங்களில் 1960ல் மீன்பிடி மற்றும் விவசாயம் என்ற காரணங்களைக்காட்டி சிங்களவர்கள் குடியேற்றப் பட்டனர். இதே சமயம் 1970ல் முள்ளிக்குளம் தொடக்கம் சிலாவத்துறை வரையுள்ள சுமார் 15 கி. மீ நீளமுள்ள கரையோரப் பகுதிகளில் பருவ கால மீன்பிடி நோக்கில் சிங்களவர்கள் வந்து குடியேறியிருந்தனர்.

எனவே, வழமையாக சிங்களக் குடியேற்றக் கிராமங்களுக்கு இராணுவப் பாதுகாப்புக் கொடுப்பதைப்போல கொண்டைச்சியில் இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டது. அதனுடன் சேர்ந்து சிலாவத்துறை முகாமும் குடியேற்றவாத நோக்குடன் அங்கு நிலைத்திருந்தது.

காரணமாக குறுகியதும், நீண்டதுமான வெளிகளையும் கொண்ட இடம்தான் சிலாவத்துறை.

இராணுவமுகாமின் பின்புறம் (மேற்கு) கடலையும், மிகுதி 3 புறங்களும் பொட்டல் வெளிகளையும், பற்றைக் காடுகளையும் கொண்டிருக்கின்றது.

...யில் முகாமின் சுற்றாடல் இருக்கவில்லை. எனவே, தான் இந்த 4 நாள் போர் துவங்கும்வரை சிலாவத்துறை முகாம் எமது முற்றுகைக்குள் இருக்கவில்லை.

## படை நடாத்துகைக்கான ஆயத்தங்கள்:-

எமக்குச் சார்பில்லாத இத்தகைய சூழலைக் கொண்டிருந்த பொழுதிலும் அதனு...

பதி தினேஸ் தலைமையில் பெரியதொரு படையணி மன்னார் வந்திருந்தது.

இந்தத் தயாரிப்புப் பற்றி தளபதி சபன் கூறுகின்றார். "நாம் இவ்வாறானதொரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப்போகின்றோம் என்பதை சிலாவத்துறைப் பகுதி இராணுவத்தினர் அறிந்து விட்டார்கள். ஏனெனில் இப்போருக்குத் தேவையான மேலதிக ஆளணிகளையும் பொருட்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக் கொண்டிருந்தோம். அதே சமயம் கொழும்புக்கான பிரயாணங்களும் நடந்துகொண்டிருந்தது. எனவே பெரிய அளவிலான படை நகர்வுகள் உளவாளிகள் மூலமும், எமது மக்களில சிலரினது பொறுப்பற்ற செய்திப்பரப்பல்களினாலும் எதிரிக்குத் தெரிய வந்து விட்டது.

நாங்கள் முகாமைத் தாக்க இருந்த தினத்திற்கு இரண்டு நாட்கள் முன்னரேயே உலங்குவானூர்தி மூலம் சிலாவத்துறை முகாமுக்குள் இராணுவத்தினரும், மேலதிக இராணுவ உதவிகளும் இறக்கப்பட்டன. கடலில பீரங்கிக் கப்பல்கள் முகாமுக்கு நேரே கொண்டு வந்து கட்டப்பட்டன."

போர் விமானங்கள் சிலாவத்துறை பகுதி மீது தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களை நடாத்தத்தொடங்கிவிட்டது. அதே வேளை கொண்டைச்சி கொக்குப் படையான், சிலாவத்துறை இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினரும்ஒரு எதிர்த் தாக்குதலுக்குத் தயாராக இருந்தனர்.

அதே சமயம் போரை நாம் தொடங்குமுன்னர் எமது அணி மீது விமானத் தாக்குதலை எதிரி ஆரம்பித்து விட்டான். எனக் கூறிய தளபதி சபன் மேலும் தொடர்ந்தார். நான் நினைக்கிறேன் தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதல் தடவையாக ஒரு முகாம் தாக்குதலுடன் கூடிய பாரிய படை எடுப்பை நாம் மேற்கொண்டோம் என்றார்

(5-ஆம் பக்கம் பார்க்க)

---

**மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாவத்துறை இராணுவ முகாமையும், அதன் அயலிலிருந்த சிறிய இராணுவ முகாம்களையும் அழித்தொழித்து சிலாவத்துறைப் பகுதியை சிங்களப் படைகளிடமிருந்து விடுவிக்கும் நோக்குடன் பாரிய படை நடாத்துகை ஒன்றை மேற்கொண்டிருந்தோம்.**

**19-03-1991 அன்று தொடங்கப்பட்ட இந்தப் படை நடாத்துகை 4 நாட்கள் இரவும் பகலும் தொடர்ந்து நடந்தது, மன்னார் மாவட்டத்தின் தென்பகுதியைத் துண்டாடும் நோக்குடன் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சிலாவத்துறை, கொண்டைச்சி இராணுவ வலயத்தை உடைத்தெறியும் முகமாக அந்தப் போர் நடாத்தப்பட்டது.**

**தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப் பெரிய ஒரு போராக அமைந்துவிட்ட இச் சண்டைகளில் 79 புலிவீரர்கள் வீரமரணமடைந்தனர்.**

**இயற்கையான தற்காப்பு நிலைகள் எதுவுமே அற்ற புவியியல் அமைப்பைக் கொண்ட இப் போர்க்களத்தில், எதிரியினது முப்முனைத் தாக்குதலையும் எதிர் கொண்டபடி போர் வியூகமமைத்து சாவுக்கு மத்தியில் உறுதியுடன் நாம் நடாத்திய போரானது. எதிரியைத் திகைக்கச் செய்துள்ளது.**

**இப் படைநடாத்துகை தொடர்பாகவும், மன்னார் மாவட்டத்தில் நாம் சந்தித்த வெற்றிகளையும் மேலெழுந்தவாரியாகச் சொல்ல விளைகின்றோம்.**

---

மன்னார் மாவட்டத்தின் தென்முனையில் சிலாவத்துறையிலிருந்து கொண்டைச்சிவரை ஒரு இராணுவ வலயத்தை உருவாக்கிப் பலப்படுத்துவதன் மூலம் அதற்கு உள்ளே இருந்த தமிழர் பகுதிகளை சிங்கள மயமாக்கி ஒரு மண் அபகரிப்பைச் சுலபமாகச் செய்யலாம் என்ற நோக்கிலேயே சிலாவத்துறைப் பகுதியை சிறீலங்கா அரசு இராணுவவலயமாக மாற்றி வைத்திருந்தது.

எனவே, இந்த நுட்ப நோக்கத்தை அடித்துடைப்பதற்காக இராணுவ வலயத்திலும், அதற்கு உள்ளேயும் பல தடவைகள் வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் சிறீலங்கா அரசின் கபட நோக்கத்திற்கு சவாலாக இருந்ததுடன், அப்பகுதி பறிபோவதைத் தடுக்கவும் முனைந்திருக்கின்றோம்.

## சிலாவத்துறை முகாம் சூழல்:-

முட்பற்றைக் காடுகளையும் உவர் நிலத்தையும் இதன் ...

ஒரு இராணுவத் தாக்குதலின் வெற்றியைத் தீர்மானிப்பதில் புறச் சூழலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

சிலாவத்துறையின் புறச் சூழல் எதிரிக்குச் சார்பாகவும், எமக்குப் பாதகமானதாகவுமே இருந்தது. உதாரணத்திற்கு யாழ் கோட்டையானது எதிரிக்கு எவ்வளவு தான் பலமானதும், பாதுகாப்பானதுமாக இருந்த நிலையிலும் கூட கோட்டையின் சுற்றுச் சூழல் எமக்கும் சார்பானதாகவுமே இருந்தது.

உயர்ந்து நீண்டு கிடந்த கட்டடங்களும், ஆழம் குறைந்த ஒரு கடல் ஏரியும் ஒரு முற்றுகைப்போருக்கு துணைசெய்திருந்தன.

இதனால் எந்த நேரமும் எதுவும் நடைபெறலாம், என்ற பீதியிலேயே, கோட்டை முகாம் சிக்குண்டு கிடந்தது. ஆனால், சிலாவத்துறைமுகாம் அப்படியான சுற்றுச் சூழலைக் கொண்டிருக்கவில்லை. ஒரு முற்றுகைப் போருக்குச் சார்பான நிலை...

...டைய கேந்திர முக்கியத்துவம் காரணமாக சிலாவத்துறை மீதான ஒரு படை நடாத்துகைக்கு புலிகள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

மன்னார் மாவட்டத்தளபதி சபனும் இந்தப்போருக்கான முன் தயாரிப்புக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். மன்னார்த் தளபதிக்கு உதவியாக யாழ். மாவட்டத்தள...



சவப்பெட்டிகளுடன் தான் நாங்கள் சண்டைக்குப் போகின்றோம்.

*மன்னார்த் தளபதி*

*- சபன் -*

www.eelamview.com

www.eelamview.com



# கொண்டைச்சி சிங்களக் குடியேற்றம்

## - ஒரு மண்பறிப்பு -

சிலாவத்துறை — முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மன்னார் மாவட்டத்தினூடே — சிறிலங்காவிலிருந்து பாயும் அருவி ஆற்றுக்குத் தெற்கே அமைந்திருக்கிறது.

இப் பிரதேசத்தை ஒரு இராணுவ வலயமாக்கி — இங்கு சிங்களக் குடியேற்றத்தை மேற்கொண்டு, அதன் பின் இதற்குத் தென் திசையில் நீண்டு கிடக்கின்ற தமிழ்க் கிராமங்களை முற்றுகைக்குள் வைத்திருந்து படிப்படியாக விழுங்கிவிட சிறிலங்கா ஒரு நீண்டகாலத் திட்டத்தை வரைந்திருக்கிறது. இத் திட்டத்தின் துவக்க நடவடிக்கை தான், இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கொண்டைச்சி கிராமத்தில் உருவாக்கப்பட்ட மரமுந்திரிகைப் பண்ணையாகும்.

மன்னார் மாவட்டத்தின் மண்வளம் — காலநிலை என்பவற்றின் அடிப்படையில், 1959 ம் ஆண்டு அனுராதபுரம் மாவட்டத்தின் எல்லையை அண்டி — வில்பத்துக் காட்டின் வட பகுதியுடன் இணைந்ததாக 6000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட இப் பண்ணை, ''கஜுவத்தை'' என்ற சிங்களப் பெயர் கொண்டே அழைக்கப்பட்டது.

இப் பகுதியிற் குடியேற்றவென பெருந்தொகையில் கொண்டுவரப்பட்ட சிங்களவர்கள், இப் பண்ணைக்கு வடகிழக்குத் திசையாக மடு வீதியை அண்டிய பகுதியில், தமிழர்களின் குடியிருப்புகள் இல்லாத பிரதேசங்களிலும், அடர்ந்த பசுமையான சோலைக் காடுகளுக்கு அருகாகவும் குடியமர்த்தப்பட்டனர். மரமுந்திரிகைப் பண்ணையின் அபிவிருத்திக்காக என்ற போர்வையுடன் கொண்டுவரப்பட்ட இவர்களுக்கு, ஆரம்பத்தில் பல சிறிய மரமுந்திரிகைத் தோட்டங்கள் மடு வீதிக்கு வடக்கே உள்ள பிரதேசங்களில் உருவாக்கிக் கொடுக்கப்பட்டன.

இதே சமயம், மடுக்கோவிலுக்கு விழாக்காலங்களில் வரும் இலட்சக்கணக்கான சிங்கள மக்களுக்கு, இங்கு பல்வேறுபட்ட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, இப் பிரதேசங்களின் வளங்களில் ஈர்க்கப்பட்டனர்.

1959 ம் ஆண்டில் கொண்டைச்சியில் மர முந்திரிகைப் பெருந்தோட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, காடுகளை அழித்து — தோட்டத்தின் நிர்மாண வேலைகளைச் செய்வதற்காக மலையகத் தமிழர்கள் கொண்டுவரப்பட்டனர் பின்பு, தோட்டத்தின் முந்திரிகை மரங்கள் பயன் கொடுக்கத் துவங்கிய பின், அவர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். திட்டமிட்டபடி சிங்களத் தொழிலாளர் கொண்டு வந்து குடியேற்றப்பட்டனர்.

1972 ம் ஆண்டில், மரமுந்திரிகையானது இலங்கையின் பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பொருட்களில் பிரதான இடத்தைப் பெற்ற போது — சிங்கள அரச மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத்தை உருவாக்கியது. இதன் பின், இப் பண்ணை கொண்டைச்சி மரமுந்திரிகைப் பெருந்தோட்டம் என பெயர்மாற்றப்பட்டது.

1972 ம் வருட விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தில் இம் ம முந்திரிகைப் பண்ணையில் பெரும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது. அச் சட்டத்திருத்தத்தின் பிரதான அம்சமாக, ''இன விகிதாசாரம்'' என்ற போர்வையில் 99% சிங்களவர்களைக் கொண்ட ஒரு பெருந்தோட்டமாக இப் பண்ணை மாற்றப்பட்டது. பின்னர், இங்கு வேலை செய்வதற்கென கொண்டுவரப்பட்ட சிங்களவர்களுக்கு மன்னார் மாவட்ட வாக்காளர் பட்டியலில் இடமும் அளிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையானது, தென்தமிழீழப் பிரதேசங்களில், படிப்படியாக சிங்களவர்களைக் குடியமர்த்தி — சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி, கால ஓட்டத்தில் தனிச் சிங்களத் தேர்தல் தொகுதிகளை உருவாக்கியதைப் போல இங்கேயும் செய்ய முனைவதைத் தெளிவுபட எடுத்துக்காட்டுகிறது.

முற்று முழுதாக மன்னார் மாவட்ட எல்லைக்குட்பட்ட இம் மரமுந்திரிகைப் பெருந்தோட்டத்தின் முகாமைத்துவ நிர்வாக நடவடிக்கைகள் எதுவுமே, மன்னார் மாவட்ட நிர்வாகத்துடன் தொடர்புபடாத வகையில் உருவாக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்காவின் உள்நோக்கத் திட்டத்தை இன்னுமொரு விடயம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. கொண்டைச்சி மரமுந்திரிகைப் பெருந்தோட்டமானது எட்டு (8) தொகுதிகளைக் ( Divisions ) கொண்டதாகப் பிரிக்கப்பட்டது. முழுத் தமிழ் ஊரில் உருவாக்கப்பட்ட இந்த எட்டுத்தொகுதிகளுக்கும் சிங்கள வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட பெயர்களே சூட்டப்பட்டன.


1) பராக்கிரம பிரிவு
2) மகாசேன பிரிவு
3) விக்கிரம பிரிவு
4) குவேனி பிரிவு
5) அபய பிரிவு
6) கெமுனு பிரிவு
7) விஜய பிரிவு
8) தம்பபன்னி பிரிவு

என்பனவே அந்தப் பெயர்களாகும்.

முட்கம்பி வேலிகளால் வியூகமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இப் பெருந்தோட்டத்தின் பிரதான வாயில், கொண்டைச்சி கிராமத்தை நோக்கியே அமைந்திருக்கிறது. ஆனால், இங்கிருந்து அனுராதபுரம் மாவட்ட எல்லையை நோக்கி இரண்டு புதிய வீதிகள் அமைக்கப்பட்டன. இப் பெருந் தோட்டத்தின் பின்புறத்திலிருந்து வில்பத்துக் காட்டினூடாக பேய்மடு — விலாச்சி என்ற இடத்தைச் சென்றடையும் 10 கி. மீற்றர் நீளமான வீதி ஒன்று இரண்டாவது. இப் பெருந்தோட்டத்தின் கிழக்கு எல்லையாக உள்ள ''மடுவனம்'' (Madhu Park) என்ற காட்டினூடாக மாதாகிராமப் பாதைவரை நீண்டிருக்கின்ற வீதி. இவ்விரண்டு பாதைகளுமே இப் பெருந்தோட்டத்தின் பிரதான போக்குவரத்துத் தொடர்புகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

மேலும், இப் பெருந்தோட்டத்தின் சிங்கள உயர் அதிகாரிகளுக்காகவும், குடியேற்றப்பட்ட சிங்கள தொழிலாளிகளுக்காகவும் தங்குமிட வசதிகள், களஞ்சியங்கள், நூலகம், விளையாட்டுக் கழகம், வாகனங்கள் திருத்துமிடம், குழாய்க்கிணறுகள், சுற்றுலா

( 5 ஆம் பக்கம் பார்க்க)




www.eelamview.com

www.eelamview.com



## கொண்டைச்சி...

( 4-ம் பக்கத் தொடர்ச்சி )

விடுதி, நீர்த்தேக்கங்கள், பாடசாலை, கூட்டுறவுவிற்பனை நிலையம், பௌத்த விகாரை போன்ற அனைத்து அங்கங்களும் செய்து கொடுக்கப்பட்டன. இத்துடன், சிறிலங்காவின் ஒரே ஒரு மரமுந்திரிகை ஆராய்ச்சி நிலையமும் இங்கு தான் அமைக்கப்பட்டது. ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், வேலையாட்கள், காவலாளிகள் எல்லா ஊழியர்களும் சிங்களவர்களாகவே இருந்த இவ் ஆராய்ச்சி நிலையம், உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் 1970 இல் நிறுவப்பட்டது.

இப் பெருந்தோட்டத் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு அவசியமான இவ் அங்கங்களைப் பாதுகாப்பதற்காகவும், இங்கு குடியேற்றப்பட்டிருந்த சிங்களவர்கள் 1983 இல் தமிழினப் படுகொலையின்பின் பயத்தின் காரணமாக வெளியேறிய போது அவர்களை மீளக்குடியேற்றி அவர்களுக்குப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவும், இப் பெருந்தோட்டத்தின் மத்தியில் உள்ள "குவேனி" தொகுதியில் ஒரு பலம் வாய்ந்த படை முகாம் அமைக்கப்பட்டது.

இவ்வாறாக, பூர்வீகத் தமிழ்க்குடிகளின் நிலமான சிலாவத்துறை — முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இப் பிரதேசத்தினை முதலில் ஆக்கிரமித்துக் கொண்டு, அதனை முப்படைகளையும் கொண்ட ஒரு பிரகடனப்படுத்தப்படாத இராணுவ வலயமாக்கி — இப்பிரதேசத்திற்குத் தெற்கே பரந்துகிடக்கின்ற முள்ளிக்குளம், பூக்குளம், வண்ணாத்திவில்லு, பெரிய நாகவில்லு, இலவன்குளம், முடகண்டாவெளி பொம்பரிப்பு, கருவாளகுடா, போன்ற பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை தமிழினத்தின் வட பகுதியிலிருந்து பிரித்து, பின்னர் அவற்றை முழுமையாக அபகரித்துவிடும் நோக்குடன் சிறிலங்கா அரசு நீண்டகாலமாகச் செயற்பட்டு வந்தது.

சிலாவத்துறை — முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இந்த இராணுவ வலயத்திற்குள் சிங்களப் படைகள் மீது நாம் தொடர்ச்சியான தாக்குதல்களை நிகழ்த்தி, இந்த ஆக்கிரமிப்பு நோக்கத் திட்டத்திற்குத் தடையாகவும் — சவாலாகவும் இருந்து, சிறிலங்காவுக்குத் தொடர்ச்சியான தலையிடியைக் கொடுத்து வந்தோம்.

20-06-1990 அன்று கொண்டைச்சி மரமுந்திரிகைப் பண்ணை இராணுவ முகாமை எமது வீரர்கள் வளைத்துக் கொண்டனர். "ஆயுதங்களைப் போட்டு விட்டு உடனடியாகச் சரணடையுங்கள்' - இராணுவத்தினருக்கு அறிவிக்கப்படுகின்றது.

படையினர் இந்த வேண்டுகோளை ஏற்காமல் அநுராதபுரத்திலிருந்து தமக்கு உதவிக்காக இராணுவ அணி ஒன்றை அழைத்த போது — 21 ம் திகதி அதிகாலை 2 மணிக்கு முகாம் தாக்கப்பட்டது.

மூர்க்கத் தனமான தாக்குதலுக்கு ஈடுகொடுத்து எதிரிகளால் நிற்க முடியவில்லை.

கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியவர்கள் தப்பி ஓடத்துவங்கினார்கள். இரண்டு மணிநேரச் சண்டையின் முடிவில் முகாம் எம்மால் வெற்றி கொள்ளப்பட்டது.

மேஜர் வசந்த் உட்பட 12 புலிகள் வீரமரணமடைந்தனர்.

தென்னாபிரிக்காவில் தயாரிக்கப்பட்ட "பவல்" கவச வண்டி உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் எம்மாற் கைப்பற்றப் பட்டன.

இதே, சமயம் முகாம் தாககப்பட்டுக் கொண்டிருந்த போது, இராணுவத்தினருக்கு உதவிக்காக அநுராதபுரத்திலிருந்து விலாச்சி வீதியூடாக வந்த இராணுவக் குவியல் ஒன்றின் மீது இடைமறித்துத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இச் சண்டையில் 10 படையினர் கொல்லப்பட்டனர். மிதி வெடிகளில் சிக்கி பலர் கால்களை இழந்தனர்.

01. 07. 1990 அன்று சிலாவத்துறை முகாமிலிருந்து முள்ளிக் குளம் நோக்கிச் சென்ற படையினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. "பவல்" கவசவண்டி சேதமாக்கப்பட்டது. இச் சண்டையின் போது கொல்லப்பட்ட, காயமடைந்த துருப்புக்கள் இரண்டு தடவைகள் உலங்குவானூர்தி மூலம் ஏற்றிச்செல்லப்பட்டனர்.

இதே நாள், புத்தளத்திலிருந்து முன்னேறி வந்த துருப்புக்கள் மீது முகத்துவாரம், பள்ளங்குழி பகுதியில் வைத்து தாக்குதல் தொடுக்கப்பட்டது. இச் சண்டையின் போது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டு, ஒரு அதிகாரி உட்பட 27 படையினர் படுகாயமடைந்தனர் என்றும், 19 சிப்பாய்கள் மிதி வெடிகளால் கால்களை இழந்தனர் என்றும் அரசு அறிவித்தது.

07-07-1990 அன்று சிலாவத்துறை, கொண்டைச்சி முகாம்களிலிருந்து பறையனாலங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த படையினர் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இத் தாக்குதலின் போது 10 படையினர் கொல்லப்பட்டனர் 22 பேர் காயமடைந்தனர் என இராணுவ தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

18-08-1990 அன்று வான்பரப்பிலிருந்து பழக்காற்றுத் துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த துருப்புக்கள் மீது உப்பு வெளி என்னுமிடத்தில் வைத்துத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது, இத் தாக்குதலின் போது 10 படையினர் கொல்லப்பட்டதுடன் இவர்களின் ஆயுதங்களும் எம்மாற் கைப்பற்றப்பட்டன,

21.12.1990 அன்று கொண்டைச்சி மரமுந்திரிகைப் பண்ணை முகாமிலிருந்து கொண்டைச்சி முகாமுக்குச் சென்ற படையினர் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் 6 படையினர் கொல்லப்பட்டதுடன் இவர்களின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

17-02-1991 அன்று சிலாவத்துறை முகாமிலிருந்து கொண்டைச்சி நோக்கி நடந்து வந்துகொண்டிருந்த பெருந்தொகையான துருப்புக்களை வழிமறித்துத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. காலை 7.42 மணி முதல் 18 நிமிடங்கள் நடந்த இச் சண்டையில் 50 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். இவர்களின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. எஞ்சியவர்கள் வந்த வழியே விரட்டப்பட்டனர்.

இவ்வாறாக நாம் நடாத்திக் கொண்டிருந்த தாக்குதல்கள், இப்பிரதேசத்தை ஓர் இராணுவ வலயமாக்கும் சிறிலங்காவின் நீண்டகாலத் திட்டத்தை கேள்விக் குறியாக்கிவிட்டன.

இந்த வெற்றிகரமான தாக்குதல்களின் வரிசையில் நடாத்தப்பட்ட இன்னொன்றே, சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான மிகப் பெரிய தாக்குதல் முயற்சியாகும்.

## சிலாவத்துறை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

**போர் ஆரம்பமாகின்றது.**

19. 3. 1991 மாலை போருக்குத் தயாரான நிலையில் எமது படையணிகள் சிலாவத்துறைப் பகுதியில் நிலை கொள்ளத் தொடங்கின. சிற்றெறும்புக் கூட்டம் நகர்வதைப்போன்று ஒழுங்காகவும் சுறுசுறுப்புடனும் எமது படையணிகள் நகர்ந்தன. சிலாவத்துறை முகாம் நீண்ட தொரு கடல் எல்லையைக் கொண்டிருந்ததால், சண்டை தொடங்கியவுடன் கடலிலிருந்து உதவிகள் வந்து சேரவிடாது தடுப்பதற்காகச்சுமார் 5 கிலோ மீற்றர் நீளத்திற்கு இருந்த கடற்கரை வெளியைக் கட்டுப்படுத்தவென எமது அணியொன்று நிறுத்தப்பட்டது.

அதே போன்று சிலாவத்துறை பிரதான முகாமிலிருந்து 6 கிலோ மீற்றர் உள்ளுக்கு கொக்குப்படையான் கொண்டைச்சி முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினர் சிலாவத்துறை இராணுவத்துடன் இணைவதை தடுப்பதற்காக எமது அணியொன்று காவலுக்கு நிறுத்கப்பட்டது. இவர்கள் காடுகளிலும் வெளிகளிலும் காவல் நின்றனர்.

இவைகள் தவிர சிலாவத்துறை முகாமையும் அதன் சுற்றாடலில் இருந்த மினி முகாம்கள் இரண்டையும் தாக்கி அழிப்பதற்குத் தேவையான படையணிகளும் தயாராக இருந்தன.

**முதல் நாள் போரும், பெண் போராளிகளின் வீரமும்:-**

19. 3. 1991 அன்று மாலை 7.00 மணியளவில் அதனைச் சூழ்ந்து கொண்டு முற்றுகையிடத் தொடங்கினோம். (இதுவரை நாமும் சிலாவத்துறை முகாம் முற்றுகைக்குள் இருக்கவில்லை.) 9.15 மணியளவில் பசிலன்கள் ஏவப்பட்டன. எதிர்த்தாக்குதலுக்கு தயாராக இருந்த இராணுவத்தினரை நிலை தடுமாறச் செய்வதற்காக நீண்ட நேரம் பசிலன் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது அதன் பின்னர் மினி முகாம்களை கைபற்றும் முயற்சியில் போராளிகள் இறங்கினர்.

மினி முகாம்களில் ஒன்று அமைக்கப்பட்டிருந்த உதவி அரசாங்க அதிபர் விடுதிக்கு முன்னால் உள்ள தென்னந் தோட்டத்தில் இராணுவத்தினர் நிலை எடுத்துக் கிடந்தனர். தாக்குதல் ஒன்று நிகழப் போகின்றது. என்பதை முன்னரே இராணுவத்தினர் அறிந்திருந்ததினால் மினி முகாமைப் பாதுகாப்பதற்காக தங்களது நிரந்தர நிலைகளை விட்டு முன்னே வந்து தூரத்தில் வைத்து சண்டையை ஆரம்பிக்க எதிரிகள் விரும்பியிருந்தார்கள். எனவே மினி முகாமை தாக்கச் சென்ற அணி முதலில் தென்னந் தோட்டத்திற்குள் நிலையெடுத்துக் கிடந்த இராணுவத்துடன் சண்டையிட்டு அவர்களைத் தோற்கடித்த பின் மினிமுகாமைத் தாக்கத் தொடங்கினர்.

இந்த மினிமுகாம கைப்பற்றப்படுவது மிகவும் முக்கியமானது. ஏனெனில் சிலாவத்துறை பிரதான முகாமிற்குச் செல்லும் வீதியை வழிமறித்தபடி இந்த மினி முகாம் உள்ளது. இதை நாம் கைப்பற்றினால்தான் பிரதான முகாமிற்குச் செல்லும் வாசல் திறக்கப்படும். எனவே என்ன விலை கொடுத்தேனும் மினி முகாமைக் கைப்பற்றுவது என்ற உறுதியுடன் இருந்தோம்.

தாக்குதலுக்குப் பொருத்தமான நேரமாக விமானங்களுக்குக் கண்தெரியாத இரவைத் தேர்ந்தெடுத்தோம். ஆனால், இரவைப் பகலாக்கக் கூடியளவிற்கு இடைவிடாது வானில் வெளிச்சக் குண்டுகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தது. விமானங்களிலிருந்தும் கடலில் நிலை கொண்டிருந்த பீரங்கிகளிலிருந்தும் குண்டுகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன.

தரையில் எதிரியின் நிலைகளிலிருந்தும் கடுமையான எதிர்ப்புகளை சந்தித்துக் கொண்டிருந்தோம். எதிரியை நோக்கிப் படிப்படியாக முன்னேறக்கூடிய வகையில் தற்காப்பு அரண்களும் களத்தில் இருக்கவில்லை. இதனால் பல போராளிகள் காயமடைந்து விட்டனர். இவர்களை அப்புறப்படுத்துவதும் கடினமான காரியமாக இருந்தது. எனவே ஒரு திகைப்பூட்டும் நடவடிக்கையைச் செய்து எதிரியை முறியடிக்க அவ்வணித்தலைவன் முடிவெடுத்தான்.

எதிரியின் அரணை நெருங்க நாங்கள். ஏவிய ஒவ்வொரு ஆர். பி ஜி ஏவுகணையும் அரணில் பட்டு வெடித்தவுடன் 2 அல்லது 3 வினாடிகளுக்கு அந்த அரணிற்குள் இருக்கும் எதிரியின் துப்பாக்கிகள் ஓய்ந்தே இருக்கும். இந்த நேரத்தைப் பயன்படுத்தி மின்னலென எதிரியின் நிலைக்குள் ஓடிச் சென்று அரணிற்குள் வைத்தே எதிரியை மடக்குவது எனத் தீர்மானித்தோம்.

இந்தப் படையணிக்குத் தலைமை வகித்த தோழன் சொல்கின்றான்.

"எனக்கு அருகில் நின்று போரிட்டுக் கொண்டிருந்த இரண்டு பெண் போராளிகளிடமும் மேஜர் ரஞ்சனிடமும் இந்த உபாயத்தை விளக்கினேன். அதன்படி ஆர். பி. ஜி. ஏவுகணை ஒன்றை எதிரி நிலை மீது ஏவினேன். அது வெடித்துச்சிதறிய அதேகணம் பெண் போராளிகளும், ரஞ்சனும் மின்னலெனப் பாய்ந்து எதிரி அரணிற்குள் சென்றார்கள். இந்தத் திடீர் நடவடிக்கையைக் கண்டு திகைப்படைந்த சிப்பாய்கள் ஆயுதங்களையும் போட்டுவிட்டு ஓட்டம்பிடித்தார்கள்

கைப்பற்றப்பட்ட அரணுக்குள் இருந்த எதிரியின் ஆர். பி. டி ரக இயந்திரத் துப்பாக்கி ஒன்றை எடுத்த மேஜர் ரஞ்சன் எதிரியை நோக்கித் தாக்குதலை வேகப்படுத்தினான். அந்த நேரந்தான் ரஞ்சன் எதிரியின் குண்டுபட்டு வீரமரணமடைந்தான்

"இந்த அரணைக் கைப்பற்ற விரைந்த பெண் போராளிகளது வீரத்தையும், செயல் திறனையும் கண்டு உண்மையில் நான் ஆச்சரியப்பட்டேன்" என மினி முகாம் தாக்குதலுக்குத் தலைமை வகித்த அந்தப் போராளி கூறினான்

குறிப்பிட்ட அந்த அரண் வீழ்ச்சியடைந்ததானது மினி முகாம் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.



"குடியேற்றவாத நோக்கில், சிலாவத்துறைப் பகுதி ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வலயமாகிவிட்டது."

மன்னார அரசியல் பொறுப்பாளர்

- சுரேஸ் -

### கரும்புலித்தாக்குதல்

சரியாக இரவு 1.00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் விடுதி மினிமுகாம் எமது கைக்குள் வந்துவிட்டது.

இப்போது சிலாவத்துறை பிரதான முகாமிற்குச் செல்லும் பாதை எமது கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது. அந்தப் பாதைக்குக் குறுக்கே போடப்பட்டிருந்த தடைகள் அகற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த இடத்தில் இருந்து சற்றுத் தொலைவில் முள்ளிக்குளம் சிலாவத்துறைப் பாதையில் வெடிமருந்து நிரப்பப்பட்ட வண்டியுடன் தயாராக டாம்போவும் நின்றுகொண்டிருந்தான்

மினிமுகாம் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்ததை வானில் நின்ற முகாம்களுக்கும் எதிரி அறிவித்து விட்டான். இப்போது கைப்பற்றப்பட்ட மினிமுகாம் எதிரியின் பலத்த குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு உட்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கிறது. அதனூடாக வண்டியைச் செலுத்த டாமபோவும் தயாராகிவிட்டான்

கரும்புலிக்கு வழிவிட்டுக் கொடுக்கும் முகமாகப் போராளிகள் தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபடலானார்கள். காயமடைந்தவர்கள் அவசர அவசரமாக அப்புறப் படுத்தப்படுகின்றனர்.

இதேசமயம், சிலாவத்துறைப் பிரதான முகாமைப் பக்கவாட்டில் தாக்கி நெருக்கிக் கொண்டிருந்த எமது குழுவொன்று இன்னமும் தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கவில்லை. காயமடைந்த சக போராளிகளை மீட்டதற்குப்பின் தற்காப்பை எடுப்பதற்காக அவர்கள் போராடிக்கொண்டிருந்தார்கள்

தயாராக வந்த வெடிமருந்து வண்டி இடைநடுவில் நிறுத்தப்பட்டது. கைப்பற்றப்பட்ட உதவி அரசாங்க அதிபர் விடுதி மினி

( 10-ம் பக்கம் பார்க்க )

www.eelamview.com

www.eelamview.com



# சிலாவத்துறை இராணுவ முகாம்

## 19-03-1991 அன்று 1 ஆம் நாள் போரில் வீரமரணமடைந்தோர்


கரும்புலி
மேஜர் டாம்போ
(கா. தயாபரன்)
மூழங்காவில் - மன்னார்


லெப். கலா
(இ. வசந்தி)
வடற்கரைச்சேனை,
மூதூர்.


லெப் யுரோம்
(லை. அந்தோனிகாந்த்)
மன்னார்.


நளினி
(சி. புவனேஸ்வரி)
கொடிகாமம்
யாழ்ப்பாணம்


பஸ்ரியன்
(சி. யுரோம்திலகர்)
நானாட்டான்,
மன்னார்.


கனகன்
(க. ரஞ்சித்குமார்)
மாங்குளம்,
முல்லைத்தீவு


மேஜர் ரஞ்சன்
(செ. தயாளன்)
பருத்தித்துறை
யாழ்ப்பாணம்


லெப். குட்டி
(இ. செல்வக்குமார்)
யாழ்ப்பாணம்.


லெப் கஜன்
(செ. விஜயராஜா)
அடம்பன்,
மன்னார்.


ஜெயசக்தி
(கு. யூடிராதிகா)
செல்வபுரம்
முல்லைத்தீவு


இளங்கோ
(தா. கண்ணன்)
எருக்கலம்பிட்டி,
மன்னார்.


ஜின்னா
(கா. கோபாலப்பிள்ளை;
களுவாஞ்சிக்குடி,
மட்டக்களப்பு.


மேஜர் செட்டி
(க. செல்வகுமார்)
பொன்னாலை.
யாழ்ப்பாணம்.


லெப் தர்சன்
(யோ. செந்தூரன்)
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.


2ம் லெப் நிலாரவி
(ச. ஜெயசீலன்)
நானாட்டான்
மன்னார்.


சுந்தர்
(செ. சூரியநவேந்திரன்)
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.


பூபால்
(நா. வடிவேல்)
நானாட்டான்,
மன்னார்.

சசிக்குமார்
வன்னி.

சூரி
வன்னி

## 20-03-1991 அன்று 2ஆம் நாள் போரில் வீரமரணமடைந்தோர்


கப்டன் மொறிஸ்
(ச. தவராசா)
வரணி, யாழ்ப்பாணம்


லெப் ஜொனி
(ச. சக்திவேல்)
புலோலி,
யாழ்ப்பாணம்


2வது லெப்
ரஞ்சித்தாத்தா
(க. குணபாலசிங்கம்)
பளை, யாழ்ப்பாணம்.


2வது லெப் அன்ரனி
(து. அகிலன்)
யாழ்ப்பாணம்.


சிவசங்கர்
(இராசேந்திரகுமார்)
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.


திவாகரன்
(தா. யோசப்சாள்ஸ்)
அடம்பன்,
மன்னார்.


லெப் நாதன்
(தி. சிவானந்தன்)
பளை,
யாழ்ப்பாணம்.


2வது லெப் சுதா
(தே. மேரிகிழாரா)
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.


2வது லெப் அம்பி
(நா. கனகரஞ்சன்)
புத்தூர்,
யாழ்ப்பாணம்


ஆனோல்ட்
(கி. குகன்)
இரம்பைக்குளம்,
வவுனியா.


மரியநாயகம்
(து. சின்னத்துரை)
புங்குடுதீவு,
யாழ்ப்பாணம்.


டெனின்
வன்னி

www.eelamview.com

www.eelamview.com



# மீதான தாக்குதல் முயற்சி

## 21-03-1991 அன்று 3 ஆம் நாள் போரில் வீரமரணமடைந்தோர்


மேஜர் சதா
(ந. திலீப்குமார்)
வரணி,
யாழ்ப்பாணம்.


லெப் நேதாஜி
(இ.மங்களேஸ்வரன்)
யாழ்ப்பாணம்.



2வது லெப் சுமன்
(மு. கேதீஸ்வரன்)
பூநகரி, மன்னார்


சத்தியமலா
(டே. தேவமலர்)
செங்கலடி,
மட்டக்களப்பு


சோமன்
(சி. ராஜேந்திரன்)
கல்வயல்,
யாழ்ப்பாணம்


[illegible]
(பா. குணபாலன)
திருக்கேதீஸ்வரம்,
மன்னார்.


கப்டன் அப்பன்
(ச. சிறிதரன்)
துக்கன்தோப்பு,
யாழ்ப்பாணம்.


லெப் கஸ்ரோ
(ந. செந்தூரன்)
யாழ்ப்பாணம்


2வது லெப் நதென
(த. சுதாராஜ்)
செல்வராயன்கட்டு
மன்னார்



வாணி
(சி. சிவராணி)
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்


சயந்தன்
(செ.லோகேஸ்வரன்)
நவாலி,
யாழ்ப்பாணம்


சங்கர்
(ரவிசங்கர்)
குமுழமுனை
முல்லைத்தீவு

அனித்தா
(வை. உதயரஞ்சனி)
கொக்குவில்,
யாழ்ப்பாணம்

காந்தன்
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.


லெப் சைமன்
(நா. மோகனரூபன்)
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.


பீற்றர்
(ச.சிறிஸ்கந்தராஜா)
மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.



காவேரி
(வை. நிரஞ்சினி)
அல்வாய்,
யாழ்ப்பாணம்.


கோணேஸ்
(சி. அன்னலிங்கம்)
புத்தூர்,
யாழ்ப்பாணம்.


கஜா
(த. பவானி)
புன்னாலைக் கட்டுவன்.
யாழ்ப்பாணம்.

## 22-03-1991 அன்று 4 ஆம் நாள் போரில் வீரமரணமடைந்தோர்


கப்டன் பாஸ்கர்
(செ. ரவிந்திரன்)
தாழ்வுபாடு
மன்னார்.


லெப் சுகந்தன்
(இ. பீற்றர்)
நெளுக்குளம்
மன்னார்.


லெப் டெனிக
(க. குகதாசன்)
மிருசுவில்,
யாழ்ப்பாணம்



2வது லெப் காந்தராஜா
(நா. ஜெயக்குமார்)
பொலிகண்டி,
யாழ்ப்பாணம்


பதுமன்
(இ. பத்மலிங்கம்)
சண்டிலிப்பாய்.
யாழ்ப்பாணம்


உதயன்
(ச. தேவநாயகம)
பளை,
யாழ்ப்பாணம்.


லெப் சுரேந்தர்
(கா. பாந்தாத்)
முருங்கன்,
மன்னார்


லெப் பரணி
(செ. துவராஜா)
மிருசுவில்,
யாழ்ப்பாணம்


லெப் றொபேக்
(கு. குலமோகன்)
அளவெட்டி,
யாழ்ப்பாணம்


2வது லெப் பசீர்
(பி.ஜேசுதாசன் குரூஸ்
வங்காலை,
மன்னார்.


சூரியகுமார்
(க.விக்கினேஸ்வரன்)
புத்தூர்,
யாழ்ப்பாணம்


மது
(இ. சுரேஸ்)
குடத்தனை,
யாழ்ப்பாணம்

www.eelamview.com

www.eelamview.com



# சோகத்தை வெல்ல

அடர்ந்த காட்டின் நடுவிலிருக்கும் பயிற்சி முகாம்.

காட்டு மரங்கள் தலை குனிந்து சலசலப்பில்லாமல் சத்தமின்றி நின்றன. பயிற்சி முகாமின் உள்ளே ஓடும் ஒவ்வொரு ஒற்றையடிப்பாதையும் டாம்போவின் காலடியைத் தேடித் தேடித் தவித்தன.

காணும் ஒவ்வொரு மரமும் — அவற்றின் ஒவ்வொரு அசைவும் அவனின் நினைவையே திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டிருந்தன.

மரங்களின் மறைவுகளில் தெரிந்தும் தெரியாமலும் அமைக்கப்பட்ட கூடாரங்கள். அவற்றிற்கு நடுவே அழகாக நிற்கும் வட்டவடிவக் கொட்டில். காட்டின் சிறிய தடிகளால் அமைக்கப்பட்ட இருக்கைகள். எதைப் பார்த்தாலும் டாம்போவின் கதை சொல்லின.

இந்த முகாமின் அழகையும் — அமைப்பையும் நிர்மாணித்தவனே டாம்போதான்.

முகாமினுள் தொலைக்காட்சியும் — வானொலியும் அவனின் இழப்பின் பின் ஒருநாளும் இயங்கவில்லை. ஆனால், அவனிருக்கும்பொழுது அவை ஒருநாளும் மௌனமாக நின்றதில்லை. போராளிகளின் இழப்புகளின் போது மட்டும் சோகமாக நின்றுவிடும் அவை. இன்று நிரந்தரமாக மௌனமாகி நின்றன.

முகாமிற்கு அருகாக ஓடும் காட்டுப்பாதையின் ஓரமாக நிற்கும் வாகனத்திடம் செல்லுங்கள். அது தன் சோகத்தைச் சொல்லும் — டாம்போவின் சாரதியத் திறமையைப் பற்றிச் சொல்லும்.

வாகனங்களைச் செலுத்தும் பொழுது அவனிற்கு அருகில் இருப்பதே இனிமையானது. காட்டின் ஒவ்வொரு மரத்திற்கும் — பாதைகளில் நீட்டிக்கொண்டு நிற்கும் கட்டைகளிற்கும் அழகாக, இலகுவாக விலகி விலகி ஓடும் அழகைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

பயிற்சி முகாமில் — போராளிகள் ஓய்வுநாள் ஒன்றில் ஒன்றாகக் கூடுவார்கள். தங்கள் மனவுணர்வுகளை, எதிர்பார்ப்புகளை கலைவடிவங்கள் மூலம் வெளிப்படுத்துவார்கள். சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்குதல் நடவடிக்கைக்கு ஒருசில நாட்களுக்கு முன்பு கூட, அங்கு ஒரு கலைநிகழ்ச்சி நடந்தது. புதிய போராளிகள் டாம்போவைப் பாடச்சொன்னார்கள். அவர்களுக்கு நன்றாகத்தெரியும் தலைவர் பிரபாகரனைப் பற்றிப் பாடும் ஒரு பாடலைத்தான் அவன் பாடுவான் என்று. ஆனாலும் அவனின் குரலில் அந்தப் பாடலைக் கேட்க அவர்கள் விரும்பினார்கள். அவனும் பாடினான்.

"பிரபாகரன் நினைத்தது நடக்கும் — அவன் புலிப்படை நெருப்பாற்றை நீந்திக்கடக்கும்." கவிஞர் காசி அண்ணனின் அந்தப்பாடல் இளைய போராளிகளின் மகிழ்ச்சிக் கூச்சல்களிடையே அவன் குரலில் ஒலித்து ஓயும்.

முகாமின் நடுவே நிற்கும் பெரிய மரத்தின் நிழலின் கீழ்த்தான் கலைநிகழ்ச்சிகள் நடப்பது வழமை. அந்த மரத்திற்கும் டாம்போவைப் பற்றி — அவனின் மனவுணர்வுகளைப் பற்றி நன்றாகவே தெரியும். அதன் அடிவேரில் இருந்துதான் அவன் தோழன் ஒருவனுக்கு தன் துயரம் நிறைந்த குடும்பப் பின்னணியைக் கூறினான். தயங்கித் தயங்கி வந்த அவனின் சோகமான குரல் இலகுவாக மறக்கக் கூடியதல்ல.

எங்கள் வீட்டில் மூன்று ஆண்களுக்குப் பின்தான் கடைசித் தங்கச்சி பிறந்தாள். நான்தான் மூத்த பிள்ளை. எங்களுக்குச் சின்ன வயதாக இருக்கும்பொழுதே அப்பாவிற்கு இயலாமல் போய்விட்டது. அம்மாதான் கூலிவேலை செய்து கஷ்டப்பட்டு எங்களை வளர்த்தா — நான் வளர்ந்ததும் அம்மாவின் சுமையைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினேன்.

என்னை விட என் தம்பிகளும் — தங்கையும் படிக்க வேண்டுமென்று நினைத்தேன். நாங்கள் எல்லோரும் ஒருகூட்டின் பறவைகள் போல் பாசம் நிறைந்தவர்களாக இருந்தோம்.

எனது தேசத்தில் நிகழ்ந்தவைகள் என்னை ஒரு போராளியாக மாறச்செய்தன. எனது குடும்பத்தின் நிலையோ தடுத்தது. ஆனாலும் நான் மண்ணுக்காக வாழ்வதென முடிவெடுத்தேன். 1986 இன் நடுப்பகுதியில் இயக்கத்தில் இணைந்து கொண்டேன்.

அதன் பின்பும் சில தடவைகள் வீட்டிற்குச் சென்றேன். ஆனால் அண்மையில் தான் என் வீட்டில் வேதனை நிறைந்த சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

தம்பிக்கும், தங்கச்சிக்கும் இடையே சின்னதொரு பிரச்சனை. அம்மா தம்பிக்கு அடித்து விட்டா. தன்னால் அண்ணனுக்கு அடிவிழுந்து விட்டதே என்ற வேதனையில் என் தங்கை அறிவீனமாகத் தன் உயிரை அழித்துக்கொண்டாள்" சொல்லிக்கொண்டிருந்த டாம்போ மௌனமானான். சத்தமற்ற அந்தக் கணங்களில் தன்னைத் திடப்படுத்திக் கொண்டே தொடர்ந்தான்.

"அதன் பின்பு கடலில் பயணம் சென்ற என் தம்பியை கடற்படை பிடித்ததாகச் சொன்னார்கள். எங்கள் தேசத்தில் கைதுசெய்யப்படுபவர்கள் காணாமற் போவதொன்றும் அதிசயமில்லைத்தானே.

என் மூன்றாவது தம்பியை அம்மாவே அழைத்து வந்து இயக்கத்தில் சேர்ப்பித்ததாகக் கேள்விப்பட்டேன். அவனும் இந்தப் பயிற்சி முகாமில்தான் ஓடித்திரிகின்றான்.

இப்போதெல்லாம் வீட்டில் எனது அம்மாவும் — அப்பாவும் தனியாக ஏக்கத்தோடு ஏதோவொரு எதிர்பார்ப்போடு இருப்பார்கள் என நினைக்கின்றேன்" எனச் சொல்லி முடித்தான்.

டாம்போ மென்மையான இரக்கம் நிறைந்த சுபாவமுடையவன். உண்மையில் சொல்லப்போனால், அவன் ஒவ்வொரு போராளியையும் தன் சகோதரர்களாக நினைத்துத்தான் பழகினான்.

இந்தியப்படை இம்மண்ணை ஆக்கிரமித்திருந்த நேரம், ஒருமுறை இவன் காலில் காயமடைந்திருந்தான். அந்நேரம் வைத்தியத்திற்காக தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பட்டான்.

# வீரத்தை விதைத்தான்

ஒரு நிலையில், தமிழ் நாட்டில் வைத்து எமது போராளிகள் கைதுசெய்யப்பட்டபொழுது டாம்போவும் கைது செய்யப்பட்டான். காலப்போக்கில் தமிழகத்திலிருந்த இந்தியச்சிறைக்கு அவர்கள் மாற்றப்பட்டார்கள்.

வவுனியா நகரத்தின் மத்தியில் பலத்த பாதுகாப்புடன் சிறைவைக்கப்பட்டிருந்த புலிப்படைப் போராளிகள் சிறையை உடைத்துத் தப்பிவந்தார்கள். டாம்போவும் அச்சிறையுடைப்பின்போது தப்பி வந்தான். அதன் பின்பு இந்தியப்படை இந்த மண்ணில் இருக்கையிலும் அவர்கள் சென்றபின்பும் டாம்போ போராட்டத்தின் வளர்ச்சிக்காகக் கடுமையாக உழைத்தான்.

கரும்புலிகளைப் பற்றி, அவர்களின் உறுதியை, ஒப்பற்ற தியாகத்தைப்பற்றி எல்லாம் பெரிதாக மதித்துக் கதைக்கும் டாம்போ ஒன்றில் மட்டும் உறுதியாக இருந்தான்.

"இந்த மண்ணின்ர விடுதலைக்காக, யாராவது ஒருவர் மரணிப்பதாக இருந்தால் முதலில் அது நானாக இருக்கவேண்டும் என்று நான் தான் விரும்புகின்றேன். மன்னார் மண்ணில் கரும்புலித் தாக்குதல் என்றால், அதனை நான்தான் செய்வேன்" என்று தெளிவாகச்சொல்வான்.

அவனின் விருப்பமும் நிறைவேறும் நாள் வந்தது. [illegible]

மரியாதையுடன் பார்த்தபடியே விலகி நின்றான்.

சிரித்தபடியே டாம்போ வெளியேறினான். முகாமின் வாசலிற்குச் சென்றவன் திரும்பி முகாமை நீண்டநேரம் பார்த்தான்.

போராளிகளிற் சிலர் கைகளைக் காட்டினர். கையை அசைத்தபடியே அவன் தொடர்ந்து நடந்தான்

19ந் திகதி, காலை நேரம். டாம்போ தன் நண்பன் ஒருவனுடன் இருந்தான். தாக்குதலில் தனக்கு வழங்கப்பட்ட கடமையைப்பற்றி அவன் நண்பன் சொல்லிக் கொண்டிருந்தான். டாம்போ மகிழ்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனிற்காக அந்த நண்பன் சோகமாக இருந்தான்.

தன் நண்பனிடம் "இப்படி ஒரு சா ஒருதருக்கும் வராது" என உறுதியாகச் சொன்னான் டாம்போ. இரவு வரும் வரை அவர்கள் காத்திருந்தார்கள்.

அன்று எல்லாப் போராளிகளிற்கும் தன் கையாலேயே உணவு தரவேண்டும் என டாம்போ நினைத்தான் போலும். பகலுணவை தன் தோழர்களுக்கெல்லாம் எடுத்துக்கொடுத்தான். அவர்கள் சாப்பிடுவதை ரசித்தபடியே பார்த்துக் கொண்டிருந்தான். போராளிகளின் கண்கள் கலங்கியிருந்தன. அன்று எவருமே முழுமையாகச்

குதல் நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

டாம்போவின் வேண்டுதல் ஏற்கப்பட்டது. தன் மரணத்தின் நாளை உறுதிப்படுத்திக்கொண்டான். முகாம் தாக்குதலிற்குரிய தயாரிப்புகளில் அவனும் கலந்து கொண்டான். இடையில் ஒரு நாள் தன் கிராமத்திற்குச் சென்றான்.

தன் தாயையும், தந்தையையும் சந்தித்தான். திடீரென அம்மாவை அணைத்துக் கொஞ்சினான். தன் மகனின் விசித்திரமான நடவடிக்கையைப் பார்த்து தாய் சிரித்தாள். தன் சிரித்த முகத்தின் இறுதித் தோற்றத்தை அவர்களுக்குக் காட்டிவிட்டு அவன் திரும்பினான்.

வேலைகளின் நடுவே தான் நேசித்த போராளிகளையும் இடை இடையே சந்தித்தான். தாக்குதலுக்கு இரண்டு நாட்களுக்கு முன் பயிற்சி முகாமிற்கு வந்தான்.

புதிய போராளிகளிடம், நான் கரும்புலியாகச் செல்கிறேன் எனக் கூறினான். டாம்போ அண்ணை பகிடி விடுகிறார் என எல்லோரும் சிரித்தார்கள். அவனும் சிரித்தான். இரவு துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வேட்டைக்குச் சென்றான். எல்லாம் வழமை போலவே நடந்தது. இவன்தான் கரும்புலியாகச் செல்கிறான் என்று சொன்னால் எவருமே நம்ப மாட்டார்கள்.

விடிந்ததும் தன் தம்பியை அழைத்து, "நான் போறன் வருவனோ தெரியாது" என்றான் டாம்போ. அவனது தம்பிக்கு எதுவுமே விளங்கவில்லை. தன் அண்ணனை

டாம்போ தனிமையிலிருக்கும்பொழுது அந்தப் போராளி நண்பன் அருகில் வந்தான். "வெடிமருந்து வண்டியை விட்டவுடன் இறங்கி ஓடிவந்து விடு" என்று மெதுவாகச் சொன்னான்.

"நான் திரும்பி வரமாட்டேன், என்னால் முடிந்தளவு உள்ளே சென்று முகாமின் சுவரோடு மோதுவதுதான் எனது நோக்கம்" என்றான் டாம்போ. அவனின் உணர்வுகளை அந்த நண்பன் விளங்கிக்கொண்டான். அவன் அதன்பின் மௌனமாகிப் போனான்.

### இரவு வந்தது

சிலாவத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஆரம்பமானது. சில மணித்துளிகளில் உதவி அரசாங்க அதிபர் விடுதியில் இருந்த சிறிய இராணுவமுகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.

அந்தப் பக்கமாக இருந்த கொண்டைச்சி வீதியால்தான் வெடிமருந்து நிரப்பப்பட்ட வண்டி இராணுவமுகாமினுள் செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வண்டி செல்வதற்காக போராளிகள் வீதியை செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த இடைநேரத்திலும் டாம்போ, தாக்குதலின் பொழுது காயமடைந்த போராளிகளைத் தூக்கி வருவதிலும் — சிகிச்சையளிப்பதிலும் ஈடுபட்டிருந்தான்.

வண்டி செல்வதற்குரிய நேரம் வந்தது.

டாம்போ வெடிமருந்து வண்டியின் அருகில் வந்தான். பக்கத்திலே நின்ற தோழனை இறுக அணைத்து முத்தமிட்டான்.

"நானும் கொஞ்சத் தூரம் வாறன்" என்றான் அந்தோழன்.

"வேண்டாம் ஏதும் நடந்தாலும் ஏன் வீணா எல்லோரும் சாவான்" என்று சொல்லியபடியே வண்டியில் ஏறி இயக்கினான் டாம்போ. வண்டியின் அருகில் ஓடிவந்தபடியே "விட்டுவிட்டு ஓடி வரலாம் தானே" என்று தயங்கித் தயங்கிக் கேட்டான் அந்தத் தோழன்.

"சரி பார்ப்போம்" டாம்போவின் இறுதி வார்த்தைகள் இவைதான்.

வெடிமருந்து வண்டி உறுமிக்கொண்டு இராணுவமுகாமைத் தேடி ஓடியது. அந்த வண்டியை நோக்கி இராணுவத்தினரின் முழு ஆயுதங்களும் குறிவைத்து இயங்கின. குறித்த இலக்கிற்கு முன்பே அந்த வண்டி வெடித்துச்சிதறியது.

ஒளிப்பிழம்புடன் கரும்புகையொன்று வானில் எழுந்து கலந்தது. கடற்கரைகளில், வயல் வெளிகளில் — தூரத்துக்காட்டின் ஓரங்களில் நின்ற போராளிகளின் நெஞ்சங்களை வெடியோசை பாரமாக அழுத்தியது. அவர்கள் நேசித்த டாம்போவின் வீரமரணச் செய்தியை அந்தச் சப்தம் காதோடு வந்து சொல்லிச் சென்றது.



கரும்புலி

மேஜர் டாம்போ

கா. தயாபரன்

முழங்காவில்

மன்னார்.

வீரமரணம்:

19 - 03 - 1991


www.eelamview.com

www.eelamview.com



(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# 22-03-1991 அன்று 4 ஆம் நாள் போரில் வீரமரணமடைந்தோர்



ஜெமிலான்
(இ. நிமலன்)
இளாலி,
யாழ்ப்பாணம்



ராபு
(கு. சிவநாதன்)
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்



கலைச்செல்வன்
(கு. மணிவண்ணன்)
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்



மணிமுடி
(பசு. கிரிதரன்)
அளவெட்டி,
யாழ்ப்பாணம்



ரெத்தினம்
(அ. மரியநாயகம்)
முருங்கன்,
மன்னார்



பாலசுந்தரம்
(செ. சிவலிங்கம்)
தலைமன்னார்
மன்னார்



மதனன்
(மு. கமல்காசன்)
கச்சாய்,
யாழ்ப்பாணம்



கலாதரன்
(வி. சிவனேசன்)
திருக்கோணமலை



பீற்றர்
(தெ. தவராஜா)
பளை,
யாழ்ப்பாணம்



சந்திரகாந்த
(கா. ராமு)
தம்பலகாமம்,
திருக்கோணமலை




ஜெரோமி
(ந. சகாயராஜா)
திருநாவற்குளம்,
மன்னார்.



சேகரன்
(த. ராஜேஸ்வரன்)
ஆமூங்காவில்,
மன்னார்



சிறி
(த. நந்தகுமார்)
கண்ணாகம்,
யாழ்ப்பாணம்.



உத்தமன்
(ப. வேலு)
தலவாக்கொல்லை,
மலையகம்.



விஸ்ணு
(க. நித்தியானந்தன்)
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்.



ரவன்
(பத்திநாதண)
கற்பிட்டி,
புத்தளம்.



பரமசிவம்
(கி. வசந்தகுலம்)
பூநகரி,
மன்னார்.



அசோக
(மோகனதாஸ்)
புதூர்,
மட்டக்களப்பு.

---

## மக்களில்



## ஒருவன்

எமது இயக்கத்தில் கரும்புலித் தாக்குதலைச் செய்வதற்குப் பலர் முன் வந்து கரும்புலிகள் அணியில் தங்களை இணைத்துள்ளனர். ஆனால், கரும்புலித் தாக்குதலை நடாத்தும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அப்படியான போராளிகளில் ஒருவன் தான் அப்பன்.

அப்பன்-

கைதடி, நாவற்குழி பிரதேசத்தில் புலிகள் இயக்கத்தின் அரசியற் பொறுப்பாளனாக இருந்தவன்.

அன்று – நாங்கள் சிலாவத்துறைத் தாக்குதலுக்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். அப்பனும் எங்களுடன் நின்றான். அங்கு கரும்புலித்தாக்குதலை நிகழ்த்துவது அப்பன் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

அப்பன் சொன்னான்-

'' கைதடிச் சந்தியில கரும்புலிகளின்ர படங்களை ஏன் வைச்சன் தெரியுமா ? ''

கரும்புலிகளின் படங்களை பெரிதாக கீறுவித்து அவன் வரிசையாக வைத்தபோது - '' ஏன் வைக்கிறாய் ? '' என்று யாரும் கேட்கவும் இல்லை; அவனாகச் சொல்லவும் இல்லை.

ஆனால், இன்று சொன்னான் -

'' நானும் ஒரு நாள் கரும்புலியாகச் சாக வேணும் என்ட இலட்சியம் என்னிடம் இருந்தது.

வெடிமருந்து வண்டி தயாரிக்கப்பட்ட இடத்திலிருந்து, போர் முனைக்கு அவன் தான் ஓட்டிவந்தான். அப்போதெல்லாம் அப்பன் பூரித்துப்போயிருந்தான்,

ஆனால்,

கடைசி நேரத்தில் அத்திட்டம் மாற்றப்பட்டு அந்தச் சந்தர்ப்பம் டாம்போவிற்குக் கொடுக்கப்பட்டபோது; அப்பன் இடிந்து போனான். அதுவரை அவனில் இருந்த துன்பத் துடிப்பை - ஆரவாரத்தை பின்பு நாங்கள் காணவில்லை.

தாக்குதல் பிரிவோடு சேர்ந்து - துப்பாக்கி ஒன்றுடன் அவன் சண்டையில் இறங்கினான்.

இன்று, கைதடியில் நாவற்குழியில் -
அவனுடைய மக்கள் அவனைத்தேடுகிறார்கள்.

சிலாவத்துறையிலிருந்து வந்த புலிவீரர்களுக்குள்ளே அவனைத் தேடினார்கள்-

களத்திலிருந்து வந்த வீரர்களின் உடல்களுக்குள்ளே அவனைத் தேடினார்கள்-

ஆனால்,

அவர்களுக்குப் புரிந்துவிட்டது - தங்களுடைய அப்பன் இனி வரமாட்டான் என்று.

எழ்மை பற்றிப் பிடித்துக்கொண்டிருந்த ஒரு குடும்பத்திலிருந்து தான் அப்பன் போராட்டத்துக்குள் வந்தான்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு – நாவற்குழி முகாமில் சிங்களப்படைகளை நாங்கள் முடக்கி வைத்திருந்த போது அவன் தன்னைப்புலிகளுடன் இணைத்துக் கொண்டான்,

சிங்களப்படைகளையும், இந்தியப் படைகளையும் அவன் பல களங்களில் சந்தித்திருக்கிறான்,

இந்தியப்படைகள் வளைத்து நின்ற அந்த நாட்களை இப்போது நினைத்துப்பார்க்கிறேன்.

அப்போது நான் தென்மராட்சிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தேன்.

கைதடி - நாவற்குழிப் பகுதிக்கு அரசியல் வேலைக்காக அனுப்பப்பட்ட எந்தப் போராளியும் திரும்பிவரவில்லை.

அடுத்ததாக அப்பன் தான் போனான் - ஏறக்குறைய அது தற்கொலைக்குச் சமனானது.

ஒரு நீரை ஒத்து இருக்கின்ற அப் பகுதிக்குச் செல்ல இரண்டு வீதிகள். ஆனால், அவை இந்தியப் படை முகாம்களால் நிறைந்திருந்தன.

அங்கு நீந்தித்தான் போகவேண்டும் - கரையேறுகிற போது இந்தியப்படையின் துப்பாக்கிகளை அவன் சந்தித்த நாட்களும் உண்டு.

முன்பு சின்னவனாக இருந்தபோது இதே நீரில் நீந்திவிளையாடியிருப்பான்- மகிழ்ச்சிக்காக. இன்றும் உயிரையும் துச்சமாக்கி நீந்துகிறான் - மக்களுக்காக,

இந்தியப்படையின் இரண்டு கண்களுக்கும் நடுவில் அவர்களை நடுங்க வைத்தபடி அந்தப் பிரதேசத்தில் அவன் இயக்கத்தின் அரசியல் வேலைகளைச் செய்தான்.

அவன் அந்த மக்களோடு சேர்ந்து வாழவில்லை. அவர்களில் ஒருவனாகவே வாழ்ந்தான். இன்று அப்பன் இல்லை. ஆனால் அவர்கள் இதயத் துடிப்போடு அவன் கலந்திருக்கிறான்.

இப்போதெல்லாம் அங்கு போகும்போது - அப்பனால் நிறைந்திருந்த அத்தெருக்கள் வெறுமையாகி விட்டது போலவும், அந்த மக்களின் கண்களில் இருந்த மகிழ்ச்சியைக்காணவில்லைப் போலவும் ஒரு உணர்வு எனக்கு ஏற்படுகின்றது.

இப்போது -

தங்களுடைய அப்பனுக்காக கைதடியில அந்த மக்கள் ஒரு நினைவாலயம் எழுப்புகின்றார்கள்.

- தினேஸ்

www.eelamview.com

www.eelamview.com



# சிலாவத்துறை....

( 5-ஆம் பக்கத் தொடர்ச்சி )

முகாமிலிருந்து சுமார் 100 யார் தொலைவில் வண்டி நிற்கின்றது. இதுவொரு அபாயகரமான நிலைமை ஆனாலும் யுத்தத்தில் இவ்விதமான கட்டங்களையும் சமாளிக்கத்தான் வேண்டும். அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை எதிரியும் ஊகித்திருப்பான். விமானங்கள் மூர்க்கம் கொண்டு தாறுமாறாகக் குண்டுகளை வீசின. கடலிலிருந்து பீரங்கி மழை பொழிந்து கொண்டிருந்தது. டாம்போ போகவேண்டிய பாதை எங்கும் ஒரே புகை மண்டலம். அந்தப் புகைக்குள் பிரதான முகாமிற்குப் போகவேண்டிய பாதையை டாம்போ தவறவிடலாம் எனக்கருதிய தோழன் ஒருவன் கைப்பற்றப்பட்ட மினி முகாம் வரை தானும் வந்து பாதை காட்டுவதாகக் கூறியிருக்கிறான். ஆனால் "குறித்த பாதைக்கூடாகவே நிதானத்துடன் நான் செல்வேன் தற்செயலாக ஏதாவது நடந்தாலும் இருவரும் மரணமடையத்தேவையில்லை" எனக் கூறித் தோழனின் வேண்டுகோளை டாம்போ நிராகரித்தான்.

இறுதியில் சுமார் மூன்று மணியளவில் எமது குழுக்கள் அனைத்தும் தற்காப்பு எடுத்த நிலையில் தன்னுடன் நின்ற தோழர்களுக்குக் கை அசைத்துவிட்டு வெடிமருந்து வண்டியுடன் டாம்போ சென்றான். கைப்பற்றப்பட்ட மினி முகாமிலிருந்து திரும்பி நேராகப் பிரதான முகாமிற்குள் செல்லவேண்டும். ஆனால் மினிமுகாமை அண்மிக்க முன்பே வண்டி இடிமுழக்கத்துடன் வெடித்துச் சிதறியது.

எதிரியின் துப்பாக்கியிலிருந்து வந்த ஒரு ரவை அல்லது கடலிலிருந்து வந்த ஒரு பீரங்கிக்குண்டு அல்லது விமானத்திலிருந்து போடப்பட்ட ஒரு குண்டு இவற்றில் ஏதோ ஒன்றின் தாக்கத்தால் வண்டி வெடித்துச் சிதறிவிட்டது. டாம்போ காற்றுடன் கலந்துவிட்டான்.

வெடிமருந்து வண்டி குறித்த இலக்கில் வெடிக்காததினால் சண்டையைப் புலிகள் நிறுத்திவிடுவார்கள் என எதிரி கணித்து இருந்திருப்பான். ஆனால் தற்காப்பு நிலையிலிருந்து மீண்டுவந்த எமது போராளிகள் மீண்டும் உக்கிரமான சண்டையை ஆரம்பித்தார்கள். இரவு விடிந்துகொண்டிருந்தது. இந்தச் சண்டையில் 14 போராளிகள் வீரமரணமடைகின்றனர்.

இரவு முழுவதும் இலக்குத் தெரியாமல் குண்டுகளை வீசிக்கொண்டிருந்த விமானக் கழுகுகளுக்குக் கண் பார்வை தெரியத்தொடங்குகின்றது.

### இரண்டாம் நாள் போர் – மினிமுகாம் கைப்பற்றல்

இரவு நாங்கள் விரித்த முற்றுகை வலை விடிந்த பின்னரும் அப்படியே இருந்தது. நான்கு இராட்சத விமானங்களும், இரண்டு அவ்ரோ விமானங்களும் பீப்பாய்க்குண்டுகளை உருட்டிவிட ஆறு குண்டுவீச்சு விமானங்கள் நான்கு உலங்கு வானூர்திகள் முற்றுகையில் ஈடுபட்டிருந்த எமது வீரர்கள் மீது இடைவிடாது குண்டுகளாலும், கலிபர் துப்பாக்கிகளாலும் தாக்குதலை நடாத்தின.

மீண்டும், மீண்டும் குண்டுகளை நிரப்புவதற்காக அநுராதபுரம் விமானத் தளத்திற்கு விமானங்கள் பறந்து சென்று வந்தன. உலங்கு வானூர்திகள் தள்ளாடி முகாமில் இறங்கி ஏறிக் கொண்டிருந்தன.

இரண்டு உலங்கு வானூர்திகளும், இரண்டு விமானங்களும் 24 மணி நேரமும் மாறி, மாறி வானில் நின்று குண்டுகளை வீசிய வண்ணமிருந்தன. தொடர்ச்சியான சண்டை காரணமாக சிலாவத்துறை இராணுவத்திற்கு வெடிமருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது. அத்துடன் காயமடைந்த சிப்பாய்களை அப்புறப்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இதை நிறைவேற்ற வான் படை முயற்சி செய்தது. 20ந் திகதி காலை 10.00 மணியளவில் முகாமின் சுற்றுப்புறத்தில் போர் விமானமும், அவ்ரோ விமானமும் குண்டுவீசிப் பாதுகாப்புக் கொடுக்க ஓர் உலங்கு வானூர்தி முகாமிற்குள் இறக்கப்பட்டது. ஆனால் அடுத்தகணம் நாங்கள் நடாத்திய எறிகணைத் தாக்குதல்களாலும், துப்பாக்கித் தாக்குதல்களாலும் உலங்கு வானூர்தி பாரிய சேதமடைந்த நிலையில் திரும்பிச் சென்றுவிட்டது.

பின்னர் தரை இறங்கும் நோக்கத்தைக் கைவிட்டு வானில் இருந்து வெடிமருந்துப் பொட்டலங்களைப் போடத்தொடங்கினார்கள் - ஆனால் கடற்காற்றுக் காரணமாகக் குறித்த இலக்கினுள் அவர்களால் போடமுடியவில்லை. அந்தப் பொட்டலங்களின் பெரும்பகுதி எமது வீரர்களின் கைகளிற்கே வந்து சேர்ந்தன.

ஆகாயமூலம் உதவிகளை வழங்கமுடியாத நிலையில் கடலில் இருந்து சிலாவத்துறை முகாமிற்குத் தேவையானவற்றை வழங்குவதற்கு முடிவு செய்தார்கள். பிற்பகல் 1.00 மணியளவில் இரண்டு பாரிய கப்பல்கள் அக் கடற்பரப்பிற்கு வந்து சேர்ந்தன. கடல்மூலம் துருப்புக்களை இறக்கி சிலாவத்துறை முகாமை பலப்படுத்தும் நோக்கிலேயே அவை வந்து சேர்ந்தன.

### சிலாவத்துறை போர் முனைகள்

இந்தப் போரை நாங்கள் முக்கியத்துவமானதும், வெவ்வேறானதுமான நான்கு முனைகளில் நின்று நடாத்திக்கொண்டிருந்தோம்.

1. சிலாவத்துறை முகாம் மீதான போர்முனை (மினிமுகாம்கள் உட்பட)
2. கொண்டைச்சி, கொக்குப் படையான் இராணுவத்தை வழிமறித்த போர்முனை.
3. சிலாவத்துறை கடற் போர்முனை.
4. வங்காலை தள்ளாடி போர்முனை.

இந்த நான்கு முனைகளில் எதாவது ஒன்று எதிரியால் வெல்லப்படுமாக இருந்தால் போரின் திசை எதிரிக்குச் சார்பானதாக மாற்றமடையும். ஒவ்வொரு போர் முனையிலும் நின்ற எமது வீரர்கள் இந்தப் போர் அறிவை நன்றாக விளங்கி வைத்திருந்தனர். எனவே, நாங்கள் உயிருடன் இருக்கும்வரை தங்களது முனையைத்தாண்டி எதிரியைப் போகவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர்.
கடலில் நிலைகொண்டிருந்த கப்பல்கள் தரையில் எம்மீது ஒரு எதிர்த்தாக்குதலை நடாத்த முயன்று கொண்டிருந்தன.

பி.ப. 4.00 மணியளவில் கடற்கரையில் போர் மேகம் கருக்கொண்டது. கரையை நோக்கிய பலத்த பீரங்கிக் குண்டுகளுக்குள் ஏழு படகுகள் கரைக்குவர முயற்சி செய்தன. கடற்கரைகளில் உருமறைப்பு நிலைகளில் நாங்கள் வைத்திருந்த 50 கலிபர், 30 கலிபர் துப்பாக்கிகளிலிருந்து வீசிய ரவைக் காற்று இந்தப் போர் மேகத்தைக் கலைத்தது.

பின்னர் மீண்டும் 5.30 மணியளவில் மீண்டுமொரு முறை விமானத்தாக்குதல்களின் உதவியுடன் கரையிறங்க முயற்சி நடந்தது. எதிரிக்கு மீண்டும் தோல்விதான் கிடைத்தது. கடற்கரை போர் முனையில் எதிரி நம்பிக்கையை இழந்தான்.

இரண்டாவது இரவு நெருங்கிக்கொண்டிருந்தது. பாடசாலைக்கட்டடத்தில் அமைந்திருந்த மினிமுகாமைத்தாக்கி அழிக்க தயாராகிக்கொண்டிருந்தோம்.

வெளிச்சக் குண்டுகளின் உதவியுடன் விமானங்களும் குண்டுகளை வீசிக்கொண்டிருந்தன.

கடலிலிருந்து ஏவப்பட்டுப் பீரங்கிக் குண்டுகள் விரித்து வைத்த குடையைப்போன்ற வடிவத்தில் பிரதான முகாமைச்சுற்றி விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன.

எம்மைப் பின்னுக்குத் தள்ளி விடுவதன் மூலம் மினி முகாமைப் பாதுகாத்துவிடலாம் என்ற நோக்கத்துடன் எதிரி தனது முழுப்பலத்தையும் பிரயோகித்துக் கொண்டிருந்தான்.

இத்தகைய கடுஞ்சமருக்கு மத்தியில் பாடசாலை மினி முகாமுக்குட் புலிவீரர்கள் புகத் தொடங்கினர்.
மினிமுகாமைச் சூழஇருந்த காவல் அரண்கள் அனைத்திலிருந்தும் எம்மவர்களைக் குறிவைத்துக் கைக்குண்டுகளையும் ரவைகளையும் எதிரி வீசிக்கொண்டிருந்தான்.

அதே சமயம் வானிலிருந்து படையூர்திகள் எமது போராளிகளைப் பின்புறமாக பலமாகத் தாக்கினர். இவற்றிற்கு மத்தியில் தான் புலிவீரர்கள் முகாமுக்குள் புகுந்துகொண்டிருந்தனர்.

நள்ளிரவுக்கு முன்னர் அந்தப் பாடசாலை மினிமுகாமையும் வெற்றிகொண்டு விட்டோம். அங்கிருந்தபடி பிரதான முகாமை இலக்கு வைத்துச் சண்டை தொடர்கின்றது. மீண்டும் இரவு விடிகின்றது.


### மூன்றாம் நாள் போர்

ஒரு நாளில் சண்டை முடியுமென எதிர்பார்த்திருந்த எதிரிக்கு மூன்றாம் நாளும் சண்டை நீடித்தது வியப்பையும், பீதியையும் கொடுத்திருக்கும்.

எனவே தான் அவசரம் அவசரமாகத் தனது முழுப் பலத்தையும் ஒருங்கே திரட்டி ஒரு முக்கு முக்கி எம்மைப் பின்னுக்குத் தள்ளிவிடத் தீர்மானித்தான்.

விடிந்ததும் விடியாததுமாக சிலாவத்துறைப் பகுதியில் பாரிய எதிர்த்தாக்குதலைத்

( 11-ம் பக்கம் பார்க்க. )




" 107 நாள் போரில் யாழ். கோட்டையில் போட்ட குண்டுகளை நான்கு நாள் போரில் சிலாவத்துறையில் சந்தித்தோம் "

யாழ். தளபதி
தினேஷ்



www.eelamview.com

www.eelamview.com





# கப்டன் பாஸ்கரன்

பாஸ்கரன், நானாட்டானில் உள்ள கள்ளிக்கோட்டை என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். அந்தக் கிராமத்திலும் அதைச் சுற்றியிருந்த வயல் வெளிகளிலும் தான் பாஸ்கரனின் வாழ்வுக்காலம் கழிந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலத்தில் இவன் விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டான். புலிகளின் பத்தாவது பயிற்சி முகாமில் — பயிற்சியை முடித்துக்கொண்டு 1986 இன் நடுப்பகுதியில் ஒரு போராளியாக மன்னார் மண்ணில் நின்றான்.

பாஸ்கரன் அமைதியான சுபாவமுடையவன். ஒரு வித்தியாசமான போராளி. சக போராளிகளின் மனவுணர்வுகளை விளங்கிக்கொண்டு அவர்களின் நலனுக்காக எதையுமே செய்யக் கூடியவன். அதனால் தான் இவனில் எல்லாப் போராளிகளும் அளவிடமுடியாத அன்பை வைத்திருந்தார்கள்.

போர்முனைகளில் பாஸ்கரன் தன் திறமையைப் பலமுறை வெளிப்படுத்தினான். ஆபத்துக்களும் இவனைத்தேடி அடிக்கடி வந்தன. இந்தியப்படை இம் மண்ணை ஆக்கிரமித்திருந்த நேரம், வவுனியா மாவட்டக் கிராமமொன்றினூடாக உழவுயந்திரத்திற் சென்றுகொண்டிருந்த புலிகளின் அணியொன்றின் மீது இந்தியப்படையினர் ஓர் தாக்குதலை மேற்கொண்டனர். மேஜர் தாடிபாலா - கப்டன் சைமன் உட்பட 12 போராளிகளை நாம் இழந்தோம்.

அச் சந்தர்ப்பத்தில் இரு போராளிகள் தப்பினர். அதில் பாஸ்கரனும் ஒருவன். அன்று இவனது துப்பாக்கி ஒரு சில ரவைகளுடன் இயங்காமல் இறுகி நின்றுவிட்டது. அச் சம்பவத்தை அதன் பின்பு அவன் பலமுறை வேதனையுடன் நினைவு கூர்வான். அதற்காகவே இந்திய ஆக்கிரமிப்புப் படையினரையும் தேச விரோதிகளையும் பலமுறை போர்க்களங்களில் சந்தித்தான்.

அந் நிலையில் தான் முள்ளிக்குளத்தில் தேச விரோத சக்திகளான "புளொட்" குழுவினர் மீது ஒரு தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் வியப்பு என்னவென்றால் - இவனது ஒரே ஒரு தம்பியும் அன்று புளொட் கும்பலுடன் நின்றான். ஆனால் பாஸ்கரன் அத் தாக்குதல் நடவடிக்கையில் முன்னின்றான். தன் தம்பி அங்கு நிற்பது அவனிற்குத்தெரியும். ஆனாலும் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குத் தடையாக இருக்கும் எவரையும் மன்னிக்க அவன் தயாராக இல்லை. அத்தாக்குதலின் வெற்றிக்குப் பாஸ்கரனின் பங்களிப்பும் முக்கியமானது.

காலப்போக்கில், பாஸ்கரனின் தம்பி புலிகளிடம் சரணடைந்து - திருந்தி நல்ல மனிதனாக மாறிவிட்டான்.

1990 ஆனி மாதம் இலங்கை அரசுடனான யுத்தம் தொடங்கிய பின் தள்ளாடி இராணுவ முகாமின் ஒரு பகுதிக் காவலரணுக்குப் பொறுப்பாக பாஸ்கரன் நியமிக்கப்பட்டான். அவனிற்கு அருகில் ராஜாராமும் பஸ்ரியும் இருந்தார்கள். இவர்கள் மூவருக்குள்ளும் பிரிக்க முடியாத உறவொன்று கலந்திருந்தது.

எத்தனையோ இரவுகளில்,

காவலரண் மண் மூடைகளில் எதிரியின் வலயத்திற்குள் கண்களை வீசியபடியே இருக்கும் இவர்கள், தம் மனத்தின் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்கள். சிந்தனையைத் தூண்டும் அந்த இரவு நேரங்கள் தான் அவர்களை மக்களை நேசிக்கும் உயர்ந்த மனிதர்களாக மாற்றியது. அவர்களிற்குள் மிக நெருக்கமானதொரு உறவு நிலையை ஏற்படுத்தியது.

சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதலின் பொழுது பாஸ்கரனும், ராஜாராமும், பஸ்ரியும் கடற்கரைப் பக்கமாக நின்றார்கள். கடலுதவியையும், கொண்டைச்சிப் பக்கமிருந்து வரும் இராணுவ உதவியையும் தடை செய்வது இவர்கள் சார்ந்த அணியின் பொறுப்பாக இருந்தது.

யுத்தம் தொடங்கியது - நான்கு நாட்களாகத் தொடர்ந்து நடந்தது. கடற்படைப் படகுகள் பலமுறை கரையை எட்டத் துடித்தன. புலிகள் அடித்துத் துரத்தினர். மன்னார்ப் போராளிகளிற்கே உரித்தான கலகலப்பும் - மகிழ்ச்சியும் அந்தப் போர்முனைப் பகுதியை நிறைத்திருந்தது.

இறுதி நாள்,

நாம் பின் வாங்க முடிவெடுத்தோம்

கடற்கரைப் பகுதியில் நின்ற போராளிகள் பரந்த வெளியொன்றைத் தாண்டி வரவேண்டி இருந்தது. அண்ணளவாக ஒரு மைல் தூரமிருக்கும்.

வானத்தில் உலங்கு வானூர்திகளும் - யுத்த விமானங்களும் வட்டமிட்டன. கொண்டைச்சிப் பக்கமிருந்து இராணுவத்தினர் முன்னேறி வந்து கொண்டிருந்தார்கள். அந்த வெட்டை வெளியில் வானத்திற்கும், தரைக்கும் ரவைகளைச் சிந்தியபடியே எம்மவர்கள் பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந் நேரம் தான்

ராஜாராம் காயமடைந்தான்.

ராஜாராமின் பலவீனமான குரலை "வாக்கிடோக்கியில்" கேட்ட பஸ்ரி தன் நண்பனை நோக்கி வேகமாகச் செல்லத்தொடங்கினான். ஆனால் "அவ்ரோ" விமானம் போட்ட குண்டொன்று அவனை நோக்கி வந்தது. அக் குண்டின் வெடியோசையின் பின்பு பஸ்ரியை எவரும் காணவேயில்லை.

விமானங்கள் இராட்சதர்கள் போல் வானத்தில் நின்றன. ராஜாராமின் குரல் உதவியைக் கேட்டுக்கொண்டிருந்தது. தனது வாக்கிடோக்கியில் ராஜாராமிற்கு உறுதியைக் கொடுத்துக் கொண்டே பாஸ்கரன் அவனை நோக்கி விரைந்தான்.

"கவலைப்படாதை - இப்ப வாறன், உன்னைச் சுட்டவனையும் இல்லாமலாக்கிறன்" பாஸ்கரனின் குரல் கேட்டுக்கொண்டிருந்தது. அதே நேரம் எதிரிகளின் துப்பாக்கி ரவைகள் பாஸ்கரனின் உடலில் விழுந்து கொண்டிருந்தன.

சிறிது நேரத்தில், அந்த வெளியைப்புலிகள் கடந்திருந்தனர். அதற்குள் கப்டன் பாஸ்கரன், 2வது லெப் பஸ்ரி உட்பட எட்டுப் போராளிகள் வீரமரணத்தைச் சந்தித்திருந்தனர்.

ராஜாராம் மருத்துவமனைக் கட்டிலில், பாஸ்கரனைப் பற்றியும், பஸ்ரியைப் பற்றியும், அவர்களின் இலட்சியத்தைப் பற்றியும் வார்த்தைகளைப் பற்றியும் நினைத்த படியே.......

# சிலாவத்துறை...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடுக்க முத்தாய்ப்புக்கள் நடந்துகொண்டிருந்தன.

தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து இரண்டு உலங்கு வானூர்திகள்மூலம் சுமார் 20 தடவைகளுக்கும் மேல் கொண்டைச்சி முகாமுக்குள் கொண்டுவந்து இராணுவத்தைக் குவித்தது.

கடலிலும் மேலதிகமாகப் பாரிய கப்பலொன்று வந்து சேர்ந்தது. இப்போது கடலில் மொத்தம் மூன்று பாரிய கப்பல்களும் சுமார் 10 பீரங்கிப் படகுகளும் பல விசைப் படகுகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவற்றிலிருந்து தரையைநோக்கிக் குண்டுகள் பொழியபட்டுக் கொண்டே இருந்தன.

இது இவ்வாறிருக்க கொண்டைச்சியிலிருந்து இராணுவத்தினர் காடுகளுக்கூடாக சிலாவத்துறையை நோக்கி வரத் தொடங்கினர் இவ்விதமானதொரு நகர்வை எதிர்பார்த்தபடி நின்ற எமது படையணி உடனடியாகவே வழிமறித்துச் சண்டையைத் தொடங்கியது.

தன்னை நன்றாகத் தயாரித்து விட்டே வான்படைகளின் பலத்த உதவியுடன் கொண்டைச்சி கொக்குப் படையான் போர் முனையை எதிரி திறந்தான். இந்தப் போர்முனை நீண்ட எல்லையைக் கொண்டதொன்றாகும்.

இராணுவத்தினர் வர முயன்றனர். விமானப்படையின் பக்கபலம் போதியளவு இவர்களுக்குக் கிடைக்காததினால் அந்தந்த இடங்களில் வைத்து மடக்கித் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இரவு நெருங்கியது மீண்டும் சிலாவத்துறை பிரதான முகாம் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தினோம். விமானங்களும் கடற்படைக் கப்பல்களும் எமது முயற்சிக்குக் குறுக்கே நின்று பெரும் சவாலாக அமைந்தபடியிருந்தன. தங்களது குண்டுச் சிறகை விரித்து சிலாவத்துறை இராணுவ முகாம் குஞ்சைப் பாதுகாப்பதற்கு பிரயத்தனப்பட்டன.

பீப்பாய்க் குண்டுகள் எரிகுண்டுகள் தாராளமாக வீசப்பட்டன. முகாமை முற்றுகைக்குள் வைத்திருந்த போராளிகளும் கடற்கரைகளிலும் கொண்டைச்சி முகாமை நோக்கி காடுகளிற்குள் நின்ற போராளிகளும் நிரத்துடன் நித்திரையின்றிப் போராடினார்கள் மூன்றாம் நாள் சண்டையில் 17 போராளிகள் வீரமரணம் அடைந்தனர். மூன்றாவது இரவும் விடிகின்றது.

## நான்காம் நாள் போர்

மூன்றாம் நாள் போரின் போது கொண்டைச்சி முகாமிலிருந்து புறப்பட்ட நூற்றுக்கணக்கான இராணுவத்



"மாங்குளமும் கொக்காவிலும் மகளிர் படையணிக்கு தரைச் சண்டை அநுபவத்தைத் தந்தன. ஆனால், சிலாவத்துறை எமக்கு முப்படையுடனும் போரிடும் ஆற்றலை வழங்கியது"

மகளிர் படைத் துணைத் தளபதி
ராதா

நாம் அமைத்த தடுப்பு வேலியை உடைத்துக்கொண்டு எந்தப்பக்கத்தாலும் எதிரி சிலாவத்துறை முகாமுக்குள் போகலாம். எனவே கடல், தரை, விமானப்பலத்தை எதிரி முழுமையாகவே பயன்படுத்தினான். இந்தச் சண்டைக்குள் நின்று காயமடைந்த போராளி ஒருவன் இப்படி அதை ஞாபகம் கொள்கின்றான்.

"மழை பெய்யும்போது சோவெனக் கேட்கும் சத்தம் மழை முடியும்வரை இடைவிடாது கேட்டுக்கொண்டிருப்பதைப்போல டம், டும் என்ற சத்தம் இடைவிடாது தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது. சிலாவத்துறைப் பகுதி முழுவதுமே புகை மண்டலமாகவே காட்சியளித்தது. மிக அருகில் நின்ற எமது தோழர்களைத் தவிர மற்ற எதையுமே காண முடியவில்லை. மழைக் காலங்களில் வானில் விமானத்தை முகில் மறைப்பதைப்போல தரையிலிருந்து கிளம்பிய புகை மண்டலம் விமானங்களை மறைத்தது. அதற்கு மத்தியிலும் காயமடைந்தவர்களை மருத்துவப் பிரிவுத் தோழர்கள் துணிச்சலுடனும் தோழமையுணர்வுடனும் மீட்டபடியிருந்தனர்".

கொண்டைச்சி, கொக்குப் படையான் முனைகளில் சண்டை மூர்க்கம் பெற்ற அதே சமயம் வங்காலை தள்ளாடி போர் முனையும் திறக்கப்பட்டது. இங்கிருந்து சிலாவத்துறைக்கு

தினரை எதிர்த்து இன்றும் சண்டை நடந்துகொண்டிருக்கிறது. சிலாவத்துறை இராணுவ முகாம் பகுதியையும் கொண்டைச்சி இராணுவ முகாம் பகுதியையும் பிரித்தபடி வேலிபோல நின்ற எமது போராளிகள் கடுமையான சண்டையைச் சந்தித்தார்கள் அந்த வேலியை உடைப்பதற்கு விமானங்களும் பீரங்கிகளும் பிரயத்தனம் செய்தன.

கொண்டைச்சிப் பகுதியில் சண்டை கடுமையடைந்தது. அங்கிருந்து முன்னேறிய இராணுவ அணிகள் கடுமையான தாக்குதலைச் சந்தித்த நிலையில் திசை திருப்பி கடற்கரையை நோக்கி நகர்ந்து அங்கிருந்து சிலாவத்துறை முகாமைச்சென்றடைய முயன்றன.

இந்த நிலையில், கடலிலிருந்து துருப்புக்களை இறக்கிவிடாது போரிட்டுக்கொண்டிருந்த எமது அணி உடனடியாகத்தனது போர்வியூகத்தை மாற்றியமைத்தது.

ஏற்கனவே கொண்டைச்சியிலிருந்து வந்த இராணுவத்துடன் போரிட்டுக்கொண்டிருந்த எமது அணியுடன் கைகோர்த்தபடி தரைச்சண்டையைத் தொடங்கியது.

சண்டை மேலும் மும்முரம் அடைந்தது. விமானங்கள் தாக்குதல் புரிந்துகொண்டிருந்தன.

வானில் இருந்து விழும் குண்டுகளைப்பார்த்து அதற்கேற்றபடி நிலையெடுக்கும்

(13 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



# காலம் அவளது கைபிடித்து நகர்கிறது

உறுதிப் படுத்தப்படாத
உலக அழிவு
ஓர் நாள்
உண்மையாகிப் போனாலும்.

அதன் பின் வரும்
யாருமே அறியாத
ஆரம்பம் ஒன்றில்......
பூபதியின் பெயர்
பொறிக்கப்பட்டிருக்கும்.

பிறிதொரு முறை
பிறந்து வரமாட்டாள் என்பது
பிழையறப் புரிகிறது.

இறந்து போனவர்களுக்குத் தானே
இன்னோர் பிறப்பு
இருக்க முடியும்.

ஆனாலும் உள்ளம்
அவளை அழைக்கிறது.

நேற்று வரை
நிலவையும் நட்சத்திரங்களையும்
நிமிர்ந்து பார்த்து
நெடுமூச் செறிந்தவள்.

இன்று -
அண்டங்களே அதிசயித்து
அண்ணாந்து பாத்து நிற்க
புவியீர்ப்புக் கப்பால்
புரையோடி நிற்கிறாள்.

அன்று
உரிமைப் பசிக்கு
உதவி கோரி நின்றோம்.

உலகநாடுகள் முன்
தமிழன்
வயிற்றுப் பசியை
வாதாட்டத்திற்கு வைத்தது
வல்லரசு.

அனைத்து நாடுகளும்
அண்ணாந்து பார்த்து நிற்க
உயரத்திலிருந்து விழுந்தன
உணவுப் பொட்டலங்கள்.

ஒருதலைப் பட்சமாக
உள்ளே வந்த வல்லாசால்
அரிசிப் பொதிகள் விழுந்த
அதே குச்சொழுங்கைகளால்
குப்பெனப் பீறிட்டது
குருதியாறு.

குச்சொழுங்கைகளில் பரவிய
குருதியாற்றுக்குக் குறுக்கே
நேருதேசத்துப் படையிடம்
நீதி கேட்டு
பூகோளம் அதிரப்
பூபதி நடந்தாள்.

அரிசி மூடைகள்
அருகில் இருக்கையில்
சோறின்றி மடிந்த
சோகம் நடந்தது.

முற்றுகைக்குட் சிக்கி
மூச்சுத் திணறிய தமிழுக்கு
காற்றுக் கொடுத்தாள்.

புனிதமான பூமிக்குள்
ஒரு —
பூகம்பத்தின் புகமுட்டிப்பு
பூபதி
தமிழ்ப்புலரியின் குடியிருப்பு.

வலம் வந்து வணங்கி
வரலாறு
வாழ்த்துப் பா இசைக்க
பதிவு செய்வதற்குப்
பக்கங்கள் போதாதென்று
சரித்திரம்-
அவள் சாவில்
விக்கித்து நிற்கிறது.

கணமும் நகராமல்
காற்று அவள்
கல்லறையில் சுழன்று வர
வரலாற்றுப் போக்கில் — தாமும்
வற்றாமல் வாழ்வதற்கு
அழியா வரம் பெற்றவளின்
அஸ்தி கேட்டு
காற்றிடம் சமுத்திரங்கள்
கையேந்தி நிற்கின்றன.

காலையில் வந்த கதிரவன்
கல்லறை வெளிச்சத்தில்
கண்கூசிக் கைகூப்ப
மாலையில் வந்த
மஞ்சள் நிலவு — அவள்
கல்லறையின் ஒளியை
கடன் கேட்டு நிற்கின்றது.

அங்கோ......
இலட்சிய வாதியின் சமாதியில்
இயற்கை
இரண்டறக் கலக்கிறது.

தாயே...... !
பிரபஞ்ச வரலாற்றின்
பிரமாண்டமான உச்சியில்
உயிரோட்டத்தோடு
உன்னை நீ
செதுக்கிச் செதுக்கிச்
செதுக்கிக் கொண்டாய்

உசத்தியாகப் பேசப்பட்ட
உலக அதிசயங்கள்
ஒதுங்கி நின்று பார்த்துநிற்க
பிரதாபங்களும் யுகங்களும்
பிரமிப்பில் ஆழ்ந்து நிற்க
காலம் — உன்னை
கை பிடித்து நகர்கிறது.

அதனால் சொல்லுகின்றோம்
உறுதிப் படுத்தப் படாத
உலக அழிவு
ஒரு நாள்
உண்மையாகிப் போனாலும்

அதற்குப் பின் வரும்
யாருமே அறியாத
ஆரம்பமொன்றிலும்
உந்தன் பெயர்
உயிர்த்திருக்கும்.



# மேஜர் ரஞ்சன்



செ. தயாளன்

தம்பசிட்டி,
பருத்தித்துறை.

வடமராட்சி - ஒப்பரேசன் லிபரேசன் நடந்து முடிந்த சில நாட்கள்.

சின்னதும், பெரிதுமாக - கடற்காற்றுக்குச் சாய்ந்துக் கொண்டிருந்த பனங்கூட லுக்கு நடுவில ரஞ்சன் நின்றான். இனி ஓடமுடியாது. நாலு பக்கத்திலும் பச்சை உடைப் பேய்கள் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பனங்கூடலிற்குள் நின்ற மக்கள் ரஞ்சனை நடுவிலிருத்தி விட்டுச் சுற்றி நின்றனர்.

வழமையான விசாரணைகள் சித்திரவதைகளை நடாத்தி விட்டு இராணுவத்தினர் விலத்திச் சென்றார்கள். அன்று, ரஞ்சன் அங்கிருந்தது தெரிந்திருந்தால், அந்தப் பனங்கூடலிலும் பல உயிர்கள் பலியாகியிருக்கக் கூடும். அந்த மக்கள் தமது உயிரை விட ஒரு போராளியின் உயிரை பெறுமதியாகக் கருதியதால் ரஞ்சன் அன்று காப்பாற்றப்பட்டான்.

அன்றே, "இது மக்கள் தந்த உயிர். இந்த மக்களின்ர விடுதலைக்காகத் தான், நான் வாழ்வதும் - சாவதும்" என உறுதி எடுத்துக் கொண்டான் ரஞ்சன் அவனது முடிவைக் கேட்டுக் கடலில் எழுந்த அலைகள் சிலவும் கரையில் மோதி ஆமோதித்தன-

ஒப்பரேசன் 'லிபரேசன் காலத்திலும், இந்தியப் படை இம்மண்ணை ஆக்கிரமித்திருந்த நேரத்திலும் வடமராட்சிப் பகுதியிலேயே ரஞ்சன் நின்றான். பகற்பொழுதுகளிலும், பயங்கரமான இரவு நேரங்களிலும் ரஞ்சனையும், அவனது தோழர்களையும் மக்கள் தான் மூடிக் காத்தனர். இந்தியப் படை வெளியேறி - சிறிலங்காவுடனான யுத்தம் தொடங்கியதன் பின்பு, வடமராட்சிப்பகுதியில் பலம் வாய்ந்ததொரு படையணியை உருவாக்க ரஞ்சன் இரவு பகலாகப் பாடுபட்டான். அதன் பின்பு அவனும் அவன் வளர்த்தெடுத்த தோழர்களும் வடமராட்சிப் பகுதி மக்களைச், சுற்றி நின்றுகாத்தனர்.

ரஞ்சன், ஒரு திறமையான போர் வீரன். அதே நேரம் இனிய மனம் படைத்த போராளி, சின்னஞ் சிறுசுகளைக் கண்டால் எப்பவுமே மயங்கி விடுவான்.

மழைநீர் தேங்கி ஈரமாக இருக்கும் வீதிகளில், சில நேரம் இவனது வண்டி தயங்கும். உடனேயே சித்தப்பா என்ற படி சில்வண்டுகள் ஓடி வரும்.

அவர்களுடன் கதைப்பதா - புதைந்த வண்டியை எடுப்பதா அவன் தயங்கி நிற்பான். வண்டி உறுமிவிட்டு ஓட மறுத்து நிற்கும். வீதியில் செல்லும் கிழவிகள் "என்ர ராசா" என்று கட்டி அணைத்து முத்தமிட்டுச் செல்வார்கள்: வெற்றிலை எச்சிலால் சிவந்த நெற்றியையும், கன்னத்தையும் அவன் சிரித்த படியே துடைப்பான்.

சீ எச்சிலென்ற படி சின்னஞ் சிறுசுகளும் சிரிப்பார்கள். "இந்தச் சிரிப்பு நிரந்தரமாகி விட வேண்டும் என்பதற்காகத் தான்.

இண்டைக்கு நாங்கள் சாகிறம்' என்று சொல்வான் ரஞ்சன். உண்மைதான், சாவை இவர்கள் தினமும் வரவேற்றதால் தான் இவர்கள் சாவில் வாழ்வு பெற்றார்கள். இவர்கள் வாழ்வதற்காக மரணித்தவர்கள்.

கோட்டை இராணுவ முகாம் மீதான இரண்டாவது தாக்குதல் முயற்சி.

கோட்டையின் வாசல் பக்கமாக உள்ளே செல்ல வேண்டிய அணியின் தலைவன் ரஞ்சன் தான். தாக்குதல் தொடங்கியது. ரஞ்சனும், அவனது தோழர்களும் முன்னேறினார்கள் ஒரு நிலையில் ரஞ்சனின் துப்பாக்கியை ரவை ஒன்று உடைத்தது. விழுந்த தோழனொருவனின் துப்பாக்கியை ஏந்தியபடி ரஞ்சன் கோட்டை மதிற்சுவரில் ஏறினான் ஆனால் அவனுடன் வருவதற்கு எவருமே இல்லை முன்னேறி வந்த வழியெங்கும் அவனுடன் வந்தவர்களெல்லாம் மரணத்தைத் தழுவியும், காயமடைந்தும் விழுந்து கிடந்தனர். அன்று புலிகள் பின் வாங்கினார்கள்.

சில நாட்களின் பின், கோட்டை முற்றுகை வெற்றி அடைந்தது ரஞ்சன் தனது முகாமில் ஒரு கோட்டையை எழுப்பினான். அதில் கோட்டையில் விழுந்த ஒவ்வொரு போராளியையும் படமாகப் பதித்தான். ஒவ்வொரு நாள் உதயத்தின் பொழுதும் அவர்களில் தான் கண்விழிக்க வேண்டும் என நினைத்தான். மனது மேலும் மேலும் உறுதி பெற்றது. "தாக்குதலை நடாத்த வேண்டும். ஆயுதங்களை எடுக்கவேண்டும். அந்த நினைவே இரவிலும் வந்து போனது.

சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதல், சிறிய இராணுவ முகாமை கைப்பற்றும் பணியில் ரஞ்சனும் ஒருவன். தாக்குதல் தொடங்கிச்சில நிமிடங்கள் சென்றன.

இரண்டு இராணுவ முகாமிற்கும் மத்தியில் இருந்த காவலரண் புலிகளால் கைப்பற்றப்படுகிறது. அக் காவலரணில் இருந்த இலகு இயந்திரத்துப்பாக்கியை எடுத்தான் ரஞ்சன். அத்துப்பாக்கி இராணுவத்தினரை நோக்கி ரவைகளைக் கக்கத்தொடங்கியது. அதே நேரம் சிப்பாய். ஒருவனின் துப்பாக்கி ரவைகள் ரஞ்சனின் உடலிலும் விழுந்தன. இன்று

ரஞ்சன் போராளியாக வாழ்ந்த மண்ணிலேயே, அவன் பெயரைச் சொல்லும் சிறுவர் பூங்கா ஒன்று, அதில் அவனும், அவனது தோழர்களும் நிழற்படமாக நினைவுகளைச் சொல்லியபடியே நிற்கிறார்கள்.

ஒளிக்கதிர் தெறிக்கும் உதயங்களின் போதும், மழை இருள் கூடும் அந்தி நேரங்களிலும் - சின்னஞ்சிறுசுகளெல்லாம், தாங்கள் நேசித்த சித்தப்பாவைப் பார்த்து அவருடன் கதைத்து, அவரின் இலட்சியத்தில் கலக்கிறார்கள்.

சித்தப்பாவின் கனவைப் போல நாளைய தேசத்தின் ஆயுதமேந்திய காவல் காரர்களாக அவர்களை வருவார்களாம்.

- துறை -

www.eelamview.com

www.eelamview.com



## சிலாவத்துறை....

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி )

சூழலில் போராளிகள் இருக்க வில்லை. அவர்களது பார்வை யெல்லாம் முன்னால் இருந்த எதிரிமீதே இருந்தது. இந் நிலையில், வீசப்பட்ட பீப் பாய்க் குண்டுகளிற் சில எமது தோழர்களுக்கு மத்தியிலும் அவர்களது தலைக்கு மேலும் வீழ்ந்து வெடித்துக்கொண்டி ருந்தன.

துப்பாக்கி ரவைகள் விசி றப்படுவதைப்போல ஏராள மான குண்டுகளும் வானிலி ருந்து வீசப்பட்டன.

நண்பகலளவில் 21 புலி வீரர்களின் உயிரற்ற உடல் கள்மீதேறி நாம் அமைத்த போர்வியூகத்தைக் கடந்து கொண்டு எதிரிகள் சிலாவத் துறை இராணுவத்துடன் இணைகின்றனர். சிலாவத் துறை முகாமுக்குத்தேவை யான ஆளணிகளும், ஆயுதங் களும் சென்றடைகின்றன.

இந்த நிலையில் போரை நாங்கள் முடிவிற்குக்கொண்டு வருகின்றோம். முற்றுகையில் நின்ற போராளிகள் கட்டம் கட்டமாக திருப்பி அழைக் கப்படுகின்றார்கள்.

இந்தப் பெரும் போருக்கு என சிலாவத்துறை முகாம் சூழலுக்கு கொண்டு வந்த எங்களுடைய இராணுவ தள பாடங்களையும் அப்புறப் படுத்தியபடி போர்க் களத்தைவிட்டு அகலத் தொடங்கினோம்.

இந்த நான்குநாள் போரை யும் முன்நின்று நடாத்திய'' யாழ் மாவட்டத் தளபதி தினேஷ் இந்தச் சண்டையைப் பற்றி பின் வருமாறு கூறு கின்றார்.

'' இது போன்றதொரு நீண்டதும் கடுமையானது மான சண்டையை இதுவரை நான் சந்திக்கவில்லை. யாழ் கோட்டை முகாம் எமதுமுற்று கைக்குள் இருந்த 107 நாட் களிலும் அதன் சுற்றாடலில் வீசப்பட்ட குண்டுகளின் தொகைக்கு இணையாக இந்த நான்கு நாள் போரிலும் சிலாவத்துறையில் குண்டுகள் வீசப்பட்டன''

யுத்த முனையில் நின்றபடி பெண்போராளிகளை வழி நடாத்திய மகளிர்படைப்பிரி வின் துணைத் தளபதி செல்வி ராதா கூறுகையில்-

''கொக்கிளாய், மாங்குளம் சண்டைகள் எங்களுக்குதரைப் படைச்சண்டை அனுபவத்தை தந்தன. சிலாவத்துறைப் போர் முப்படைகளையும் ஒரே சமயத்தில் எதிர்கொள் ளும் வல்லமையையும் அதற் குரிய அனுபவத்தையும் எமக்கு ஊட்டியுள்ளது. மொத்தத்தில் மகளிர் படை அணி ஒரு படைநடாத்துகைக் குரிய போர் அனுபவத்தைப் பெற்றுவிட்டது எனக் கூறி னார்.

சிலாவத்துறைப் பகுதியின் கேந்திர முக்கியத்துவத்தைப் பற்றி மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கூறுகையில்......

''குடியேற்றவாத நோக்கில் சிலாவத்துறை ஒரு கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த பகுதி. மன்னார் மாவட்டத்தின் தென் பகுதியை கபளீகரம் செய்யும் இனவாத பூதத்தின் பற்கள்தான் சிலாவத்து றைப்பகுதி.

6 கி மீ இடைத்தூரம்கொண்ட சிலாவத்துறை - கொண்டச்சி பகுதியை இணைத்து இராணுவவலயமாக்கிவிட்டு அதன் கீழ்ப் புறத்திலுள்ள தமிழர் பிரதேசங்களைச் சிங்கள மய மாக்குவதுதான் சிங்கள அர சின் திட்டம்,,

இந்தத்தாக்குதலைத் திட்ட மிட்டு தலைமையேற்றுநடாத் திய மன்னார் தளபதி சுமன் கூறுகையில்···


'' சண்டைக்குச் செல்லும் போது நாங்கள் ஆயுதங்களு டன் சவப்பெட்டிகளையும் கொண்டுதான் செல்லுகின் றோம்.'' என்றார்.

# ஆபத்துக்கு தண்ணீர் கொடுப்பதும் சில வேளைகளில் ஆபத்தைத் தரும்...

வயது வந்தவர்களின் உடலில் சராசரியாக 44 லீற்றர் நீர் உண்டு. இதில் ஆண்களில் 5 லீற்றரும் பெண்களில் 4.5 லீற்றரும் இரத்தமாக உள்ளது. ஏதோ ஒரு காரணத்தால் சடுதியாக 2 லீற்றர் இரத்தம் குறுகிய நேரத்திற்குள் இழக்கப்படுமாயின் மரணம் ஏற் படும். உடலுக்கு ஒரு நாளைக்கு 8 லீற்றர் நீர் தேவைப் படுகிறது. இதனை நாம் பலவழிகளில் எடுக்கின்றோம். அதே போன்று உடலிலிருந்து நீர் சிறு நீராகவும் மற் றும் வியர்வையாகவும், சுவாசத்துடனும் மலத்துடன் சிறிதாகவும் வெளியேறுகிறது. உடலுக்குத்தேவையான நீரினளவை தாகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மூளையி லுள்ள பிரத்தியேக நிலையமொன்று கண்காணிக்கிறது. உடலிலுள்ள இரத்தத்தினளவின் அடிப்படையிலேயே இந்த நிலையமே இயங்குகிறது. அது தான் விமானக் குண்டு வீச்சு துப்பாக்கிச் சூடு அல்லது விபத்து போன்றவற்றால் திடீரெனக் காயப்படும்போது இரத்தப் பெருக்கு ஏற்பட்டதும், தாகம் ஏற்படும். எனவேதான் காயப்பட்டவர்கள், தண்ணீர் தண்ணீர் என்று கத்துவது வழக்கம்.

இது ஒரு புறமிருக்க, வாய்மூலம் உட்கொள்ளு கின்ற நீர் உணவு அனைத்தும் உணவுக் குழாய் மூலம் வயிற்றை அடைகின்றது. இதற்கு இயற்கையாகவே அதிலுள்ள கீழ் நோக்கிய அசைவுகளும் கீழ்ப்பகுதி யிலுள்ள மூடியும் உதவுகின்றன. அதுதான் சாப்பிட்ட பின்னர் தலைகீழாக நின்றாலும், சாப்பாடு வாந்தியாக வெளியே வருவதில்லை. அத்துடன் தலைகீழாக நின்று கூடச்சாப்பிடலாம். அதுவயிற்றுக்குள் போகும். ஆனால், மயக்க மருந்து கொடுக்கும் போது அல்லது காயப் பட்டு மயக்கமடையும்போது உணவுக்குழாயினதும் மூடி யினதும் இயக்கம் செயலிழந்து விடும் இதனால் வயிற் றுக்குள் உள்ளவை வாந்தியாக திரும்பி வந்து, சுவாசக் குழாய் மூலம் சுவாசப்பைகளை அடைவதால் திடீர் மரணம் அல்லது கடுமையான மூச்சுத் திணறல் ஏற்படும். வயிற்றுக்குள் சென்றடையும் உண வும் நீரும் முற்றாக உணவுக் குழாயின் மற்றைய குடற் பகுதியை அடைய குறைந்தது 4மணித்தியாலங்கள் எடுக் கும் எனவே காயப்பட்டவருக்கு இரத்தப்பெருக்கினால் தாகம் ஏற்படும் போது, தண்ணீர், சோடா, இளநீர் தேநீர் என ஏதாவது கொடுத்தால் குறைந்தது 4 மணி நேரத்திற்கு முழு மயக்க மருந்து கொடுக்க முடியாது. அதாவது சத்திரசிகிச்சை மேற்கொள்ள முடியாது.

கடுமையாகக் காயப்பட்டவருக்கு உடனடியாக உயிர் காக்கும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் உயி ராபத்து ஏற்படும். ஆனால் வாய் மூலம் ஏதேனும் உட் கொண்டிருந்தால் மயக்க மருந்து கொடுத்தாலும் உயி ராபத்து ஏற்படும், எனவே காயப்பட்டவருக்கு வாய்மூலம் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு வரும்வரை ஒன்றுமே கொடுக் காமல் கொண்டுவரவேண்டும்




பொறுப்பற்ற முறையில் பேசுவதைத் தவிர்ப்போம்.

## போர்நிறுத்தமும்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் தங்குநிலையை தமிழர் புரிந்துகொண்டால் தீவிர போக்கைக் கடைப் பிடிக்கமாட்டார்கள் என சிங் கள இனவாதிகள் கருதக் கூடும். ஆயினும் இந்த பொருளாதார அழுத்தம் தமிழ் மக்களுக்கு என்றுமில் லாத ஒரு புதிய விழிப்பு ணர்வை ஏற்படுத்தியது. சிங்கள தேசத்தில் தங்கிநிற் கும் பொருளாதார வாழ் வால் எழும் பேராபத்துக் களைக் கண்டு உணர்த்தி யது. சுயநிறைவான, சொந் தத்தாயகத்தில் தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வின் முக் கியத்துவத்தை புரியவைத் தது. எந்தச் சவாலையும் ஏற் கும் அபாரமான மனவுறுதி யையும், தன்னம்பிக்கையை யும் பிறக்கச்செய்தது. இந் தப் பொருளாதார அழுத்தம் தன்னாட்சி உரிமையின் அர சியற் தேவையையும், பொரு ளாதார சுதந்திரத்தின் அவ சியத்தையும் எமது மக்க ளுக்கு அனுபவரீதியாக உணர்த்தியிருக்கிறது. எனவே, இந்த விசயத்தி லும் சிங்கள அரசு தமிழீழ மக்களின் மனநிலையைத் தவறாக மதிப்பீடு செய்தி ருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக் கம் வன்முறைப் போராட் டத்தை கைவிடுவதாக உறுதி மொழி அளிக்கவேண்டும் என பிரேமதாசா ஒரு புதிய நிபந்தனையை விதித்திருக்கி றார். ஆயுதங்களை கைவிட வேண்டும் என்ற பழைய நிபந்தனை புதிய வடிவத் தில் தெகிழ்த்தப்பட்டிருக்கி றது. ஆனால் உண்மையில் வன்முறையை யார் கைவிட வேண்டும்? புலிகளா? அரசா? ஆயுத வடிவத்திலான புலிக ளின் வன்முறைப் போராட்டம் அரச பயங்கரவாத வன்முறை யின் எதிர் வினைவாகவே தோற்றம் கொண் டது என்பது வரலாற்று உண்மை. ஒடுக்குமுறையா ளரின் அநீதியான, பிற்போக் கான வன்முறைக்கு சவாலா கவே விடுதலைப் புலிகளின் புரட்சிகரமான, தர்மத்தை வேண்டிய வன்முறைப் போராட்டம் ஆரம்பமாகி யது. எனவே வன்முறை யைக் கைவிடுவதாக உறுதி யளிக்கவேண்டியது சிங்கள அரசே தவிர விடுதலைப் புலிகள் அல்ல.

### சர்வதேசத்தின் முன் சிறீலங்காவின் கபட நாடகம்

பேச்சுவார்த்தை மூலம் அர சியல் தீர்வை விரும்புவதாக பிரேமதாசா அரசு அறிக் கைகளை வெளியிடுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. சிறீலங்காவுக்கு ஆண்டுதோறும் கடன்பிச்சை வழங்கும் மேற்குலக நாடு கள் யுத்தத்தை விரும்ப வில்லை. கடனாக வழங்கப் படும் நிதி யுத்த செலவினங் களுக்கு பயன்படுவதை இந் நாடுகள் எதிர்ப்பதோடு, பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணுமாறு சிங்கள அரசுமீது தொடர்ந்து அழுத் தம்போட்டு வருகின்றன. எனவே, ஆண்டுதோறும் கட னுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னராக சிறிலங்கா அரசு சமாதான சமிக்ஞைகளை வெளியிடுவது இப்பொழுது ஒரு வருடாந்த நிகழ்வாக மாறிவிட்டது. சிங்கள அரசின் இந்தக் கபட நாடகத்தை அம்பலப்படுத் தவே புலிகள் இயக்கம் இம் முறைப் பேச்சுக்களுக்கு சர்வ தேச சமூகத்தின் கண்கா ணிப்பை வலியுறுத்தி வருகி றது. தென்னாசிய பிரதேசத் தில் அரசியல் — பூகோள கேந்திர நலன்கள் இல்லாத உலகநாடுகளின் மேற்பார் வையின்கீழ் பேச்சுக்கள் நடாத் தப்பட்டால் எமது மக்களின் நியாயபூர்வமான பிரச்ச னையை நாகரீக உலகத் திற்கு எடுத்துவிளக்கலாம். ஆனால் சிங்கள அரசு சர் வதேச சமூகத்தின் தலை யீட்டை விரும்பவில்லை. தமிழர் பிரச்சனை சர்வதேச அரங்கிற்கு உயர்த்தப்படு வதை விரும்பாத பிரேம தாசா அரசு கொழும்பில் பேச்சுக்களை நடாத்த விரும்பு கிறது. ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்கா லப் பேச்சுக்களை கொழும் புக்கு அப்பால் உலகநாடு ஒன்றின் தலைநகரில் அரங் கேற்றவேண்டுமென வற்பு றுத்திவருகிறது.

தமிழர் பிரச்சனைக்கு அர சியல் தீர்வு காண்பது சம் பந்தமான நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத் திற்கும் சிங்கள ஆளும்வர்க் கத்திற்கும் மத்தியில் நீண்ட நிரப்பமுடியாத இடைவெளி இருக்கிறது. விடுதலைப் புலி கள் இயக்கம் தமிழர் பிரச்ச னையை ஒரு தேசியப் பிரச் சனையாகக் கருதுகிறது. தமிழர் தேசியம், தமிழர் தாய கம், தமிழரின் தன்னாட்சி உரிமை என்ற அடிப்படை கள் அங்கீகரிக்கப்பட வேண் டும் - இந்த அங்கீகாரத் தின் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்பது புலிகளின் நிலைப்பாடு. சிங்கள அரசு ஒற்றையாட்சியின் கீழ் ஒரு தீர்வை விரும்புகிறது. இலங் கைத்தீவு பூராகவும் சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்டும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பை மாற்றி யமைக்க அரசு தயாராக இல்லை. தமிழர் பிரச்ச னையைச் சிறுபான்மை இனத் தவரின் அரசியல் பிரச்சனை யாகத் திரித்துக்காட்டி, தமி ழர் தாயகத்தின் பிரதேச ஒருமைப்பாட்டையும், தமிழ ரின் தன்னாட்சி உரிமையை யும் சிங்கள அரசு மறுக்கி றது. இந்த முரண்பாடான நிலைப்பாட்டை பேச்சுவார்த் தைகள் மூலமாகத் தீர்க்கமுடி யுமா என்ற கேள்வியைப் பலர் எழுப்பலாம். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் தரப்பினருடன் சிறிலங்கா அரசு நடாத்திய பேச்சுக்கள் அனைத்துமே தமிழரை ஏமாற்ற மேற் கொள்ளப்பட்ட நயவஞ்சக முயற்சிகளாகும் தொடர்ந் தும் பேச்சுவார்த்தை என்ற நாடகமாடிச் சிங்களப் பேரின வாதம் தமிழரின் உரிமையை மறுக்கும் என்பது திண்ணம்.

ஆயினும், புலிகள் இயக் கம் பலம்பொருந்திய நிலை யிலிருந்து பேச்சுக்களை நடாத்துவதும், தமிழரின் தன் னாட்சி உரிமைக்குச் சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைத் தேடுவதும் விடுதலைப் போராட்டத்தை முன்னேற் றப் பாதையில் இட்டுச்செல் லும்.

www.eelamview.com

www.eelamview.com



# அனுமதிப்பத்திர முறை (பாஸ்) ஏன் அமுல்நடாத்தப்படுகிறது?

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர், சங்குப்பிட்டியில் நீண்டிருந்த மக்கள் வெள்ளத்தில் ஒருவராக நடுத்தரவயது மதிக்கத்தக்க ஒருவரும் நின்றார். இடையிடையே இருமிக்கொண்டு குளிரில் நடுங்கியபடி நின்ற அந்த நோயாளிமனிதரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

மருத்துவ சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் அந்த நோயாளி யாழ்ப்பாணத்தில் இருந்தால் மருத்துவ வசதியின்றிச் சிலநாட்களில் இறந்து போய் விடலாம்.

வழிகிலும், வள்ளத்தில் ஏறும்போதும், இறங்கும் போதும் ஒழுங்குபடுத்துவதற்கு நின்ற இளைஞர்கள் அந்நோயாளிக்கு அனுதாபத்துடன் உதவிசெய்தனர்.

தாண்டிக்குளம் காவலரணையும் கடந்து வவுனியா நகருக்குள் அவர் செல்கின்றார்.

இதுவரை நிமிர்ந்து சென்ற தமிழர்கள் தலை குனிந்து நடந்தனர், ஆனால் அந்த நோயாளி நிமிர்ந்து நெஞ்சை நிமிர்த்தி நடந்தார், அவரின் நோயாளித் தோற்றம் மறைந்தது.

நகரத்துக் கடையொன்றில் வைத்துத் தேசவிரோதகும்பலைச் சேர்ந்த ஒருவனைச் சந்தித்தவுடன் அவர் கையோடு கொண்டு சென்ற மருந்துப் போத்தலை எடுக்கின்றார். அதற்குள் சுருட்டி வைத்தபடி வரைபடம் ஒன்று இருந்தது. இருவரும் சிரித்தமுகத்துடன் சிங்களப் படை முகாமிற்குள் நுழைந்தனர்.

இரண்டு நாட்களின் பின், தமிழீழப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தன "விமானங்கள் மூன்று இடங்களில் அகோர குண்டுவீச்சு" "இரண்டு புலிகளும் பத்துப் பொதுமக்களும்பலி"

இது கற்பனையில் வடிக்கப்பட்ட கதையல்ல. இப்படிப்பல நிகழ்ச்சிகள் இந்த மண்ணில் தொடர்ந்தும் நிகழ்கின்றன.

இந்தத் துரோகங்கள் எப்படி நிகழ்கின்றன?

இவற்றைத் தடுக்க வழியில்லையா? என்ற கேள்விகளுக்கு விடைகாணும்போது அனுமதிப்பத்திரத்தின் தேவையும் — அவசியமும் உணரப்படமுடியும்.

இன்று வடதமிழீழம் எமது நிருவாகத்திற்குள் இருக்கின்றது. இங்கே சிங்கள இனத்தைச் சேர்ந்த உளவாளி ஒருவன் எமது தெருக்களில் நடமாடித் தகவல்களைச் சேர்க்க முடியாது ஆகவே எமது இனத்தைச்சேர்ந்ததுரோகி ஒருவரிடமிருந்துதான் எதிரிக்கு தகவல்கள் செல்கின்றன.

எமது நிர்வாகப் பகுதிகளிலிருந்தபடி துரோகி ஒருவன் வோக்கி — டோக்கி போன்ற தொலைத் தொடர்புக் கருவிகளுக்கூடாக எதிரிக்குத் தகவல்களை வழங்கமுடியாது.

அதேசமயம் இந்தப்பகுதிகளில் இருக்கும் இராணுவ முகாங்களுக்கு நேரடியாகச் சென்று கொடுக்கவும் முடியாது. ஏனெனில் அந்த முகாங்கள் எமது முற்றுகைக்குள்ளேயே இருக்கின்றன.

இந்த நிலையில் உளவாளிகளின் தகவல்கள் வவுனியாவிற்கான பிரயாணப்பாதையூடாகத்தான் பரிமாறப்படுகின்றன.

வடதமிழீழத்தை விட்டு அப்பால் செல்லவிரும்பும் ஒருவன் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக் கொண்டுதான் செல்கின்றான் அவ்விதமே உளவாளியும் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டுதான் செல்கின்றான். இவன்தன்னை உளவாளி என பிரகடனப் படுத்தமாட்டான்.

அப்படியாயின் உளவாளிகளையும், சந்தேகத்துக்கு இடமானவர்களையும் எவ்விதம் நாம் அடையாளம் காண்பது?

அனுமதிப் பத்திரமுறை இதற்கு உதவும்.

அனுமதிப்பத்திர முறையானது உலகில் புதியதொன்றல்ல. இது வெவ்வேறு பெயர்களில் உலகநாடுகள் அனைத்திலுமுண்டு. தனது நாட்டிற்குள் வருவோர் — போவோர் தொடர்பாக ஒரு கட்டுப்பாட்டையும் கண்காணிப்பையும் வைத்திருக்க வேண்டியது ஒவ்வொரு அரசினதும் கடமையாகும் அனுமதிப்பத்திர நடைமுறையூடாக இவைகள் செயறபடுத்தப்படுகின்றன.

தமிழீழத்தைப் பொறுத்தளவில் உளவாளிகளும், நாசகாரசக்திகளும் நச்சுக்காய்களாக இருக்கின்றார்கள். இவர்களைக்கண்காணிக்கவும், அத்துடன் போதைப்பொருள் வருகையையும், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பியோடிவிடாதபடியும் அனுமதிப்பத்திரமுறை தடுத்து வைத்திருக்கின்றது.

அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்குச் சில ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்த ஒழுங்கு முறைகள் துரோகங்கள் நடப்பதைத் தடுப்பதுடன் ஒரு உளவாளி உருவாவதற்குரிய சூழலையும் இல்லாமல் செய்கின்றது.

அதாவது வடதமிழீழத்தை விட்டு அப்பால் செல்லவிரும்பும் ஒருவர் முதலில் தன்னைக் கிராமமத்தியில் அடையாளம் காட்டிக்கொள்ள வேண்டும். கிராமரீதியாக அமைக்கப்பட்ட சிற்றூரவைத் தலைவர்களது உறுதிப்படுத்தப்பட்ட நற்சான்றிதழ் கடிதத்துடன் பிரதேசப்பொறுப்பாளரை அணுகித் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அங்கே அந்த விண்ணப்பம் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மாவட்டச் செயலகத்தின் அனுமதியுடன் உரியவரிடம் அனுமதிப்பத்திரம் கையளிக்கப்படும்.

இந்த அனுமதிப்பத்திர முறைக்கூடாகப் பல உளவாளிகளையும், தப்பியோட முயன்ற சில குற்றவாளிகளையும், சமூகச்சீர்கேடுகளில் ஈடுபட்டுவந்த சில நபர்களையும் கைதுசெய்துள்ளோம்.

இதில் மிக அண்மையில் கைதுசெய்யப்பட்ட முக்கியமான ஒருவரது விபரத்தைப் பார்ப்போம்.

மணியந்தோட்டம் 2-ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த சிறீகணேசபுனிதன் என்ற 31 வயதுடைய நபர் 1983 ம் ஆண்டிலிருந்து புளொட் குழுவுடன் இயங்கி வந்திருக்கின்றார்.

தேச விரோதச் செயல்களுக்காக 1986ம் ஆண்டின் பிற்பகுதியில் புளொட் தடைசெய்யப்பட்ட பின்னர் இவர் உடுவிலில் ஒரு மணிக்கூட்டுக் கடையை வைத்திருந்தார். ஆனால் அங்கே இருந்தபடி தமிழீழத்திற்கு வெளியே இருந்த புளொட்டினருக்கு தகவல்களைக் கொடுக்கும் ஒரு உளவாளியாகவே இவர் வேலைசெய்து வந்தார்.

இந்திய இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்த பின்னர் இந்தியப்படைகளுடன்சேர்ந்து தேசபக்தர்களை ஒழிக்கும் நடவடிக்கைகளில் "புளொட்சிறி" என அழைக்கப்படும் இவர் ஈடுபட்டு வந்தார். அந்தக் காலப் பொழுதில் புளொட்டின் யாழ் மாவட்ட உதவிப் பொறுப்பாளராக இருந்துள்ளார். கொள்ளை, ஆட்கடத்தல் உட்பட பல சமூகவிரோதச் செயல்களுக்கும் இவர் தலைமைதாங்கியுள்ளார்.

முக்கியமாக உரும்பிராயைச் சேர்ந்த பாக்கியம் அக்கா (நடராஜா பாக்கியம்) எனப்படும் தேசபக்தர் 01-06-1988 அன்று இவனால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

தமிழீழத்தை விட்டு இந்திய இராணுவம் வெளியேறிய போது இவனும் கொழும்புக்குத் தப்பியோடியிருந்தான். பின்னர் மீண்டும் தன்னை உருமாற்றிக்கொண்டு திருட்டுத்தனமாக வட தமிழீழத்துக்குள் புகுந்து கொண்டான.

இங்கிருந்தபடி சிங்களப் படைகளுடன் இருக்கும் புளொட் குப்பலுக்கு இரகசியமாக தகவல்களைப் பரிமாறிக் கொண்டு சில நாசவேலைகளுக்குத் திட்டமிட்டுக்கொண்டிருந்தான் இவனது தகவல்களின் பேரில் சில இடங்கள் விமானக் குண்டுவீச்சுக்கு இலக்காகியது.

இந்த நிலையில் மீண்டும் கொழும்பு சென்று தனதுஅதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து சதியோசனை நடாத்துவதற்காக போலிப்பெயரில் அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பித்திருந்தார்.

இந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டபோது சந்தேகம் கொண்ட நாம் புலன்விசாரணைகளில் ஈடுபட்டபோது சம்பந்தப்பட்ட நபர் யார் என்பதைக் கண்டுபிடித்தோம்.

இதே போன்று பல உளவாளிகள் அனுமதிப்பத்திர முறை என்ற வடிகட்டியூடாக வடித்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

அப்படியாயின் எதற்காக அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு முன் மண்மீட்பு நிதி செலுத்தப்படவேண்டும் எனக் கேட்கப்படுகின்றது?

மண்மீட்புநிதி செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே அனுமதிப்பத்திரம் கிடைக்கும் என்பது தவறானது. மண்மீட்பு நிதியை வழங்க உண்மையாகவே வசதிஇல்லாதவர்கள் வெளியே செல்வதற்கு உரிய தகுந்த காரணங்கள் காட்டப்பட்டால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

இங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது மக்கள் போராட்டம். மக்களுக்கான போராட்டம். மண்மீட்புநிதி என்பது எமது போராட்டத்திற்குத் தேவையான நிதியைத் திரட்டும் ஒரு வழிமுறை. இந்த நிதியைத் தமிழீழ மக்கள் தான் வழங்கவேண்டும். அன்னியர்கள் அதை வழங்குவார்கள் என எதிர்பார்க்கக்கூடாது. அவ்விதம் எதிர்பார்ப்பது, தேசாபிமானம் அற்ற, இன கௌரவம்அற்ற ஒரு இழி செயல்.

இன்று, தேசாபிமானம்மிக்க மக்கள், எது நடந்தாலும் இந்தத் தேசத்திலேயே இருக்கப் போகின்றவர்கள், மண்மீட்பு நிதியைச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். பலர் தங்களை வருத்தியும், தங்களுடைய தேவையைச் சுருக்கியும் தேசாபிமான உணர்வோடு அதை வழங்குகின்றனர்.

இதேசமயம் மண்ணைவிட்டோடும் மனநிலையில் இருப்பவர்களும், சுயநலமிகளும், பல்வேறு காரணங்களைக் காட்டி மண்மீட்புநிதி செலுத்துவதைத் தட்டிக்கழித்துவருகின்றனர். இவர்கள் வசதியின்மையைத்தான் காரணம் காட்டுகின்றனர்.

ஆனால் இவர்கள் அனுமதிப்பத்திரம் பெறமுனைவது வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும், கொழும்பில் நீண்டகாலம் தங்கியிருந்து சுகபோக வாழ்வு வாழ்வதற்காகவுமே.

இத்தகையவர்களிடம் மண்மீட்புநிதியைச் செலுத்திவிட்டு அனுமதிப் பத்திரத்தைப் பெறுங்கள் என்று கேட்பதில் தப்பில்லைத்தானே.

இவ்விதமாகத் தமிழீழதேசத்தின் நலனைக் கருத்திற் கொண்டு அனுமதிப்பத்திர முறையை அமுல்படுத்துகின்றோம்.

## வீர வணக்கம்

எதிரியைப் பதம்பார்க்கும் எமது வெடிமருந்துகள் சிலவேளைகளில் எமது தோழர்களையே பதம்பார்த்துவிடுவதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் பெறுமதிவாய்ந்த எமது தோழர்கள் பலரின் உயிர்களும் அழிக்கப்பட்டிருக்கின்றன.

வெடிமருந்துகளுடன் புழங்கும் தோழனுக்கு ஒன்று மட்டும் நன்கு தெரியும். என்றோ ஒரு நாள் இடிபோன்றதொரு ஓசையை ஒரு கணப்பொழுதுக்கு- தன்னைச்சுற்றி உணர்வான். அந்த வெடியோசையுடன் அவனது உடலும் சுக்குநூறாக்கப்பட்டுவிடும்.

வெடிமருந்துகளுடன் வேலைசெய்யும் போராளிகள் அத்தகைய வெடிவிபத்தொன்றை எதிர்பார்த்தபடி - மரணத்துள் நின்றுதான் வேலை செய்கின்றார்கள்.

ஒரு இயந்திரக்கோளாறு அல்லது ஒரு தொழில்நுட்ப வழு அல்லது ஏதோ ஒரு தவறு விபரீதமுடிவில் கொண்டு சென்றுவிடும். இப்படியான வெடிவிபத்துக்களை எமது இயக்கம் சந்தித்துள்ளது. இவற்றுள் சில ஏன் நடைபெற்றன? என்ற காரணத்தை அறியமுடியாத அளவுக்கு அமைந்துவிடுவதுண்டு. அதாவது விபத்து நடைபெறும்போது அருகில் நின்ற தோழர்கள் எவருமே உயிருடன் இருப்பதில்லை.

லெப்கேணல் பொன்னம்மான், மேஜர் கேடில்ஸ் உட்பட கைதடி வெடிவிபத்தில் வீரமரணமடைந்த 11 போராளிகளையும், மேஜர் சுபாஸ் கப்டன் தாடிசிறி உட்பட திருநெல்வேலி வெடிவிபத்தில் வீரமரணமடைந்த 4 தோழர்களையும் மேற்குறித்த விபத்துக்கான உதாரணமாகக் கொள்ளலாம். இந்த விபத்துக்களில் சிக்கிய மக்களும் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

அவ்விதமானதொரு வெடிவிபத்தை மீண்டும் சந்தித்துள்ளோம். 30-04-1991 அன்று காலை யாழ் நீராவியடியில் எமது முகாம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 12 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

லெப் அப்பா (குமாரசிங்கம் சுந்தரலிங்கம் மயிலிட்டி), தேவநாஸ் லோரன்ஸ் (யாழ்ப்பாணம்), பாலகிருஷ்ணன் ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் மதியழகன் (யாழ்ப்பாணம்), திருநாவுக்கரசு பவீந்திரன் (உரும்பிராய்), கார்த்திகேசு குமார் (நல்லூர்), பெரியசாமி நாகேஷ் (அரியாலை), செல்வம் காமினி (கொழும்புத்துறை), செலஸ்டின் ஆனந்தராஜா (குருநகர்), தருமன் ஸ்ரீபன் (குருநகர்), சிவப்பிரகாசம் ஸ்ரீகாந் (திருநெல்வேலி) ஆறுமுகம் சிவநேசன் (கொக்குவில் இவர்களுக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com